வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 23.11.2022 புதன்கிழமை | இதழ் : 350 | பக்கங்கள் : 15

# மீண்டும் பெரும்பான்மையை நிரூபித்தது ரணில் அரசாங்கம்!

## வரவு - செலவு திட்டம் நிறைவேற்றம்

- தமிழ் தேசிய கூட்டமைப்பு நடுநிலை
- அரசாங்கப் பக்கம் தாவினார் துமிந்த
- முன்னணி, முற்போக்கு கூட்டணி எதிர்ப்பு

கொழும்பு, நவம்பர் 23

**2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு 37 மேல திக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 137 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் அளிக்கப்பட்டன.**

அரசுடன் இணைந்து இயங் கும் ஈ. பி. டி. பி. இலங்கை தொழி லாளர் காங்கிரஸ், தேசிய காங்கி ரஸ், முஸ்லிம் தேசிய கூட்டணி என்பன அரசாங்கத்தின் பிரதான கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

வரவு - செலவு திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி யின் க. வி. விக்னேஸ்வரன் நடு நிலைமை வகித்தன.

எனினும், தமிழ்த் தேசிய 15

## 8 இலட்சம் கண்ணிவெடிகள் வடக்கு - கிழக்கில் அகற்றம்!

யாழ்ப்பாணம், நவ. 23

வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் கண்ணிவெடி களை அகற்றும் அரசாங் கத்தின் வேலைத்திட்டத் தின் கீழ் இதுவரை 8 இலட்சத்துக்கும் அதிக மான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

206 சதுர கிலோ மீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு, அவை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கைய ளிக்கப்பட்டுள்ளன. இன் னமும், 15 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் 15

## உள்ளூராட்சி மன்றங்களில் இளையோரை அதிகரிக்க திட்டம்!

கொழும்பு, நவ. 23

தீர்மானம் எடுக்கின்ற செயன்முறையில் இளை ஞர் பிரதிநிதித்துவத் துக்கு வாய்ப்புகளை வழங்குவதற்காக விளை யாட்டு மற்றும் இளை ஞர் விவகார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் பிறேம்நாத் ஸ்ரீ தொலவத்த தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூல மொன்று பாராளு மன்றத்தில் 15

## வல்லையில் மீன்பிடித்த இளைஞர் மாயம்!

வடமராட்சி, நவ. 23

வல்லை பாலத்தின் மீது அமர்ந்திருந்து தூண் டில் மூலம் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளை ஞன் தவறி கடலில் விழுந்து காணாமல் போயுள்ளார்.

புத்தூர் - கலைமதி பகுதியைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு கடலில் வீழ்ந்து காணா மல் போனார் என்று கூறப்படுகின்றது.

அவருடன் சேர்ந்து மீன்பிடித்துக் கொண்டி ருந்த இளைஞர்களை விசாரணைகளுக்காக பொலிஸார் தடுத்து வைத்திருந்தனர்.

நேற்றிரவு வரை அந் தப் பகுதியில் மக்கள் பொலிஸார் இணைந்து தேடுதல்நடத்தியும்இளை ஞன் மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




சர்வதேச போதைப்பொருள் கடத்தலை முறி யடிக்கும் நோக்கில் அமெரிக்கா இலங்கைக்கு வழங் கிய கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்தது.

## ஆசிரியைகளின் ஆடை மாற்றம் கல்வி அமைச்சுக்கு தொடர்பில்லை!

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, நவ. 23

ஆசிரியர்களின் ஆடை மாற்றத்துக்கும் கல்வி அமைச்சுக்கும் தொடர்பில்லை. கோவிட் தொற்று பர வல் காலத்தில் அரச சேவையாளர்களின் ஆடை தொடர் பில் வெளியிட்ட சுற்று நிரூபத்தை மீள் திருத்தம் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சரிடம் வலியு றுத்தியுள்ளேன் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த சபையில் தெரிவித்தார். 15

## தமிழ் கட்சிகள் ஒன்றாக வந்தால் பேச்சு நடத்த எந்த நேரமும் தயார்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, நவ. 23

தமிழ் கட்சிகள் ஒன்றி ணைந்து வந்தால் தீர்வு தொடர்பில் பேச்சு நடத்த எந்தநேரமும் நான் தயா ராகவுள்ளேன்.", இப்படி தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க.

தமிழர்களின் பிரச் னைகளுக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் எப்போது பேச்சை ஆரம்பிக்கவுள் ளீர்கள் என்று ஊடகம் ஒன்று அவரிடம் எழுப் பிய கேள்விக்கு பதில ளித்தபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் கட்சி களை பேச்சுக்கு வருமாறு நான் 15

## வந்தார் பஸில் ராஜபக்ஷ ஒதுக்கப்படுகிறார் நாமல்?

கொழும்பு, நவ. 23

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப் பாளர் பஸில் ராஜ பக்ஷ நாடு திரும்பியுள்ளார். இத னால், பொதுஜன பெரமுன கட்சிக் குள் நாமல் ராஜபக்ஷ ஓரங் கட் டப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்று அறிய வருகிறது.

பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா சென்றிருந்த நிலையில் கட்சிக்குள் அவர் அதிகாரத்தை படிப்படி யாக இழந்து விட்டிருந்தார். 15

## பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் சர்வதேச சக்தி!

### மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 23

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக் கடியின் பின்னணியில் சர்வதேச சக்தி ஒன்று செயல்படுகிறது. இந்த சக்தி இன்னும் செயல் படுகிறது என்று முன் னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று செவ் வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் 15

## மீனவர்களுக்கு தடையில்லாமல் ம.எண்ணெய் வழங்க நடவடிக்கை!

கொழும்பு, நவ. 23

மீனவர்களுக்கு மண் ணெண்ணெய் முறையா கவும் தொடர்ச்சியாக வும் விநியோகிப்பதை உறுதிசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள் ளது.

ஜனாதிபதி அலுவலக பணிப்பாளர் (சமூக விவ காரம்) நாயகம் கீர்த்தி தென்னகோன் 22 நவம் பர் 2022 திகதியிடப் பட்ட விசேட அறிவித் தல் கடிதத்தை மாவட்ட 15

# இப்படியும் நடக்கிறது...!

இந்திய பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க வைக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சி பற்றி இப்போது தெரியவந்திருக்கிறது.

இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தின் ஊடாக மோடி - ரணில் சந்திப்புக்கு அரசாங்கம் முயற்சித்தது. ஆனால், அது சாத்தியமாகாத நிலையில், இந்தியாவில் உள்ள தூதுவர் மிலிந்த மொறகொட ஊடாக சந்திப்புக்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டது. அதுவும் தோல்வியடைந்தது. பின்னர் ஜனாதிபதி தனது சகா சாகல ரத்நாயக்கவை இந்தியாவுக்கு அனுப்பி சந்திப்புக்கான முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், அங்கு சாகலவால் அந்நாட்டு வெளிவிவகார செயலாளரை சந்தித்து உரையாட மட்டுமே முடிந்தது. ஆனால், அரசாங்கம் இன்னும் தனது முயற்சிகளை முடிக்கவில்லை என்பதை கடந்த வாரம் முன்னாள் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சி ஒன்று வெளிப் படுத்தியது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் அந்த நாட்டின் வலிமையான நபராகவும் பிரதமர் மோடியுடன் மிக நெருக்கமாக செயல்படும் இந்திய அரசாங்கத்தின் முடிவெடுக்கும் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் வலிமையான நபராகவும் உள்ளார். கோட்டாபய அரசாங்கத்தின் காலத்தில் கோட்டாபயவுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றிய பிரமுகராகவும் டோவல் அறியப்படுகின்றார்.

இது தவிர, மிலிந்த மொறகொடவுடனும் டோவலுக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததால் கடந்த வாரம் டோவலை சந்தித்த மிலிந்த எப்படியாவது மோடிக்கும் ரணிலுக்கும் இடையிலான சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை விடுத்து டோவலிடம் மிலிந்த மற்றொரு கோரிக்கையை விடுத்தாராம்.

டோவலுடன் பேச கோட்டா விருப்பமாக உள்ளதாக அவர் தெரிவித்ததுடன், டோவலுக்கும் கோட்டாபயவுக்கும் இடையே தொலைபேசி உரையாடலையும் ஏற்பாடு செய்தார். இந்த சிநேகபூர்வ கலந்துரையாடலின்போது, டோவலிடம் அன்பான வேண்டுகோள் விடுத்து தற்போதைய ஜனாதிபதிக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

கோட்டாபயவுக்கும் டோவலுக்கும் இடையேயான இந்த தொலைபேசி அழைப்பு கடந்த வாரமே மேற்கொள்ளப்பட்டது என்றாலும், கடந்த ஜூலை மாதம் 'கோட்டா கோ கம' போராட்டம் உச்சத்தை எட்டியபோது கோட்டாபயவுக்கும் டோவலுக்கும் இடையே பல தொலைபேசி உரையாடல்கள் இடம்பெற்றன. அந்த இக்கட்டான நேரத்தில், குறிப்பாக கோட்டாபயவுக்கு டோவல் பல அழைப்புகளை எடுத்திருந்தார். அப்போது, தான் பதவியை விட்டு விலக தயார் என டோவலிடம் தெரிவித்த கோட்டாபயவிடம் இந்தியா ஒரு கோரிக்கை முன்வைத்தது தொடர்பாக 'ஈழநாடு' தலைப்புச் செய்தி ஒன்றையும் முன்னர் வெளியிட்டிருந்தது.

அவர் பதவி விலகிச் செல்லும்போது, அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து வெளியேற்றிவிட்டு செல்லுமாறு இந்தியா அழுத்தம் கொடுத்திருந்ததாகவும் அவ்வாறு செய்ய அவர் சம்மதம் தெரிவித்திருந்தபோதிலும் இரகசியமாக நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் பல்வேறு தரப்பினரின் அழுத்தங்கள் காரணமாக அந்த வாக்குறுதியை கோட்டாபயவால் நிறைவேற்ற முடியவில்லை. அதனால் இந்தியா - கோட்டா இடையிலான உறவுகள் மோசமான நிலையை அடைந்தன.

இந்தப் பின்னணியில், நீண்ட காலத்துக்குப் பின்னர் கடந்த வாரம் டோவலுடன் கோட்டாபய தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டார்.

இந்த சம்பவத்தின் பின்னணியில் உள்ள மற்றோர் இரகசியத்தை இந்தியா தற்போது வெளியிட்டுள்ளது. அதாவது, டோவலுக்கு கோட்டாபய வழங்கிய வாக்குறுதிகளை மீறுவதற்கு பஸில் ராஜபக்ஷவும் உடந்தையாக இருந்துள்ளார். அந்த வாக்குறுதியை மீறுவதற்கு பலமான செல்வாக்கு செலுத்தியவர் பஸில் என்பதை இந்தியா தற்போது உறுதிப்படுத்தியுள்ளது. அதன்படி, தற்போது பஸிலுடன்கூட இந்தியா நல்ல மனநிலையில் இல்லையாம்.

எவ்வாறாயினும், டோவலுக்கும் கோட்டாபயவுக்கும் இடையிலான இந்த தொலைபேசி உரையாடலுக்கு சில நாட்களுக்கு முன்னர், கொழும்பில் மற்றுமொரு சிறப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அஜித் டோவலின் மகன் சௌர்யா டோவல் ஆரவாரமின்றி திடீரென இலங்கை வந்தார்.

அஜித் டோவலைப் போலவே, சௌர்யாவும் இந்திய பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய உறுப்பினராகக் கருதப்படுகின்றார். கட்சியுடனும் மோடியுடனும் நெருக்கமாகச் செயல்படும் பிரமுகராகவும் உள்ள அவர் மோடியின் முடிவுகளை எடுக்கும் 'சிந்தனைக்குழு'வின் பிரதிநிதியாகவும் உள்ளார். தனக்கு மிகவும் நெருக்கமான இந்திய தொழிலதிபர் ஒருவருடன் சௌர்யா இரண்டு நாள் தனிப்பட்ட பயணமாக இலங்கை வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இதனை அறிந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சௌர்யாவை தனிப்பட்ட சந்திப்புக்கு அழைத்து சந்தித்துள்ளார். ரணிலை சந்தித்த மறுநாளே சௌர்யா இந்தியா திரும்பிவிட்டார்.

இந்தப் பின்னணியிலேயே, இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட முக்கிய அதிகாரி ஒருவர் திடீரென கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இலங்கை வந்திருந்தார்.

அவரின் இந்தப் பயணத்தில், ஜனாதிபதி ரணில் உட்பட சிலரை சந்தித்துவிட்டு ஞாயிறு மாலையே இந்தியா திருப்பிவிட்டார். அவரின் இந்த வருகையின் பின்னர் இந்தியா- ரணில் உறவில் ஏதேனும் மாற்றம் வருகின்றதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

# சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்னுடனேயே இருக்கிறது!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு, நவ. 23

சுதந்திர கட்சிக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை மிகுந்த மனருத்தமளிக்கிறது. இந்நிலைமைக்கு நான் செயல்படுத்தத் தவறிய விடயங்களும் காரணமாகும். எவ்வாறிருப்பினும் எவராலும் சுதந்திரக் கட்சியை அழிக்க முடியாது. சுதந்திரக் கட்சி இன்றும் என்னுடனேயே இருக்கிறது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட காணொலியில், தற்போது சுதந்திர கட் சிக்கு ஏற்பட்டுள்ள நிலைமை மிகுந்த கவலையளிக்கிறது. இதற்கு நானும் பொறுப்பு கூற வேண்டும் என்று சில சந்தர்ப்பங்களில் தோன்றுகிறது. எனது பெற்றோரினதும், என்னுடையதும் அர்ப்பணிப்பால் சுதந்திர கட்சிக்கு 23 ஆண்டுகள் ஆட்சியில் நிலைத்திருக்க முடிந்தது.

2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் ஏற்பட்டிருந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டே 9 ஆண்டுகளின் பின்னர் நான் மீண்டும் அரசியலில் ஈடுபடத் தொடங்கினேன்.

2015 இல் தனித்தே நான் இந்தத் தீர்மானத்தை எடுத்தேன். இதன் போது நான் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துள்ளதாக என்மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. 3 ஆண்டுகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த செயல்திட்டம் எம்மால் அதிகாரத்துக்குக் கொண்டு வரப்பட்ட தனியொரு நபரால் முழுமையாக வீழ்ச்சியடையச் செய்யப்பட்டது.

2015இல் கட்சி கட்டியெழுப்பப் பட்ட போதிலும் , மைத்தி ரிபால சிறிசேன ஏனைய தரப்பினருடன் இணைந்து அதனை சீரழித்துள்ளார்.

என்னை கட்சியிலிருந்து புறந்தள்ளினர். சிரேஷ்ட தலைவர்கள் பலரின் இரத்தத்தினால் உருவான இந்த கட்சியை எவரும் அழிக்க முடியாது. கட்சி பலமடைய இன்னும் சிறிது காலம் செல்லும். ஆனால், நிச்சயம் அது இடம்பெறும்.

அன்று நான் இவ்வுலகில் இருப்பேனா என்று தெரியாது. எவ்வாறிருப்பினும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய இளம் தலைமுறையினரை நான் உருவாக்கிச் செல்வேன். - என்றார்.

# பேராசிரியர் கந்தராஜாவுக்கு கைதடியில் பாராட்டு விழா!



யாழ்ப்பாணம், நவ. 23

அவுஸ்திரேலிய மேற்கு சிட்னிப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் விஞ்ஞானியும் எழுத்தாளருமான ஆசி. கந்தராஜாவுக்கு அவரின் சொந்த மண்ணான கைதடியில் பாராட்டு விழாவும் கௌரவிப்பும் நடைபெற்றது.

எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான சாகித்திய விருது அவருக்கு அண்மையில் வழங்கப்பட்டது. அவர் எழுதிய பணச்சடங்கு என்ற சிறுகதைத் தொகுதிக்கே இந்த விருது வழங்கப்பட்டது. இதையொட்டியே அவருக்கு கௌரவிப்பு விழா நடைபெற்றது. கைதடி இணுங்கித் தோட்டம் அன்னை இரத்தினம் மணி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஓய்வு பெற்ற அதிபர் ப. செல்லத்துரை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், பேராசிரியர். சி. சிவலிங்கராஜா, கவிஞர் சோ. ப. மற்றும் பல கல்விமான்கள் வாழ்த்துரைகளை வழங்கினார்கள்

இதேசமயம், கடந்த 2001ஆம் ஆண்டு ஆசி. கந்தராஜாவின் 'பாவனை பேசலன்றி' என்ற சிறுகதைத் தொகுதிக்கும் சாகித்ய விருது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## சத்ய சாயி பாபா பிறந்தநாள் விழா

கொழும்பு,நவ.23

கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலை யம், புது செட்டித்தெருவிலுள்ள சாயி நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 97ஆவது பிறந்த நாள் நிகழ்வு இன்று அதிகாலை 5 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஊஞ்சல், சாயி பஜனை, திரி மங்கள ஆராத்தி, பிறந்தநாள் கேக் வெட்டுதல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஐ)

## விளையாட்டு அரங்க திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 23

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் க. தனபாலசிங்கம் ஞாபகார்த்த விளையாட்டு அரங்கு திறப்புவிழா நாளை வியாழக்கிழமை மதியம் 12.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கு. விமலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் க. ஜெயபாலசிங்கம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்வி பணிப்பாளர் (பொது நிர்வாகம்) ஞா. ஆதவன், கௌரவ விருந்தினர்களாக மா. நிர்மலன், மாவை சோ. சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும் குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும் உயிர் காக்கும் மரங்களை பணம் காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியமாகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்"

*பொ. ஐங்கரநேசன் ( தலைவர் , தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்)*

ஈழநாடு
Eelanadu
23.11.2022 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பழைய பாணியில் மகிந்த?

வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தின்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் பொருளாதார சரிவுக்கு பின்னால் வெளிநாட்டு சக்திகள் இருக்கின்றன எனவும் அவைகளின் உள்நாட்டு முகவர்கள் இப்போதும் செயல்திறனுடன் இருக்கின்றனர் என்றும் தெரிவித்திருக்கின்றார். பாதுகாப்பு செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கேள்வியெழுப்புகின்றனர். எல்லாவற்றை விடவும் நாட்டின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதென்றும் மகிந்த தெரிவித்திருக்கின்றார். மகிந்தவின் 'மெதமுல்ல' தந்திரோபாயம் மீளவும் எட்டிப்பார்க்கின்றது.

2015இல் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டபோது, அதனை வெளிநாட்டு சதியென்று கூறிக்கொண்டே மீளவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆட்டத்தை ஆரம்பித்தார். முதலில் இந்திய உளவுத்துறையான றோவின்மீது குற்றம்சாட்டினார். சில நாட்களில் அமெரிக்க உளவுத்துறையான சி. ஐ. ஏ. மற்றும் பிரித்தானிய உளவுத்துறையான எம். ஐ - 6மீது குற்றம்சாட்டினார். இதன்மூலம் விடுதலைப் புலிகளை தோற்கடித்து சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய தன்னை வெளிநாட்டு சக்திகள் திட்டமிட்டு தோற்கடித்து விட்டதான கதையொன்றைக் கூறினார். இதுவே அவரின் பிரதான பிரசாரமாக இருந்தது.

இந்தப் பிரசாரத்துடன்தான், தனது மெதமுல்ல இல்லத்திலிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆட்டத்தை ஆரம்பித்தார். ரணில் - மைத்திரி அரசாங்கத்தின் உள்முரண்பாடுகளும் - குறிப்பாக, ரணில் - மைத்திரி அதிகார மோதல்களும் மகிந்தவின் ஆட்டத்துக்கு வலுச் சேர்த்தது. இந்தப் பின்னணியில்தான் ஈஸ்டர் தாக்குதலும் இடம்பெற்றது. ஈஸ்டர் தாக்குதல் சிங்கள மக்கள் மத்தியில் மீளவும் தீவிரவாத அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருந்தது. இவை அனைத்தும், கோட்டாபயவின் வெற்றிக்கு வழிவகுத்தது.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக ராஜபக்ஷக்களின் செல்வாக்கு வீழ்ச்சியுற்றிருக்கின்றது. பொதுஜன பெரமுன கட்சியில் உடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் மீளவும் ராஜபக்ஷக்களின் செல்வாக்கைத் தூக்கி நிறுத்துவதற்கு, அதேபழைய துருப்புச்சீட்டையே மீளவும் கையிலெடுத்து இருக்கின்றார். அதாவது, நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தங்களுடைய தவறுகளல்ல காரணம். உண்மையான காரணம் வெளிநாட்டு சக்திகளே. அவைகள் சிங்கள மக்களின் பாதுகாப்பை கேள்விக்கு உள்ளாக்க முற்படுகின்றன. இந்தத் துருப்புச் சீட்டை வீசுவதன் மூலம் தென்னிலங்கையின் சிங்கள தேசியவாத சக்திகள் அனைவரையும் தங்களை நோக்கி மீளவும் ஒருங்கிணைக்க முடியுமென்று மகிந்த ராஜபக்ஷ கணக்குப் போடக்கூடும். தென்னிலங்கை பௌத்த - சிங்கள தேசியவாத சக்திகளை மீளவும் ராஜபக்ஷக்களை நோக்கி ஒருங்கிணைத்தால் ஆட்சியை கைப்பற்ற முடியாவிட்டாலும்கூட, 2015இற்கு பின்னர் பலமான எதிரணியாகவிருந்து ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை தடுத்தது போன்றதொரு செயல்பாட்டை மீளவும் செயல்படுத்தமுடியும்.

தென்னிலங்கையின் சிங்கள அரசியல் வரலாற்றில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு வலுவான துருப்புச் சீட்டாக, வெளியாரின் மீதான எதிர்ப்புக்கு முக்கியபங்குண்டு. குறிப்பாக இந்திய எதிர்ப்பு சிங்கள தேசிவாதத்துடன் பின்னிப்பிணைந்திருக்கும் ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டுதான், 2015இல் தேர்தல் தோல்விக்கு பின்னால் இந்திய உளவுத்துறை இருந்ததாக மகிந்த உடனடியாகவே குறிப்பிட்டிருந்தார். வீழ்ச்சியுற்ற தங்களின் செல்வாக்கை தூக்கி நிறுத்துவதற்கு அதே பழைய மெதுமுல்ல பாணியை கைக்கொள்ள மகிந்த முயற்சிக்கின்றார்.

# இதயத்தில் ஜோதி ஏற்றுவோம்...!

**ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 97ஆவது அவதார தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த கட்டுரை பிரசுரமாகிறது.**

**கே.வி .சிவனேசன்**
*( இணைப்பாளர் - மனித மேம்பாட்டுக் கல்வி ஸ்ரீ சத்ய சாயி சர்வதேச நிறுவனம், வட பிராந்தியம்)*

*"எனது சக்தியால் வியப்பையும் அதிசயத்தையும் பரப்பி அதனால் மக்களை என்பால் இழுத்துக் கொள்வது என் நோக்கமல்ல. சத்தியத்தை நிலை நாட்டவும் பொய்மையை வேரோடு களைந்து எறியவுமே எனது அவதாரம் நிகழ்ந்தது. அந்த வெற்றிப் பேரொளியில் உங்கள் அனைவரையும் மகிழ்வுற்று அன்பானவர்களாக ஆக்குவேன்."*

*- பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா.*

*மேற் குறிப்பிட்ட கூற்றுக்கு ஏற்ப மனித குலத்துக்கு எளிமையான வழிகாட்டல்களை பகவான் வழங்கியுள்ளார். அடியார்கள் அனைவரும் அவ் வழியில் சென்று நற்பேறுபெற வேண்டும் என்ற நல் நோக்கில் உலகெங்கும் சத்திய சாயி நிலையங்களை நிறுவி அருள் பாலித்திருக்கிறார். பகவானின் அவதார தினத்திலே அதனை நினைவு கூருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*வேதத்தில் உள்ள பிரபஞ்ச தர்மம் கூறும் சாதனைகளையும் ஆன்மீக நியமங்களையும் முதுமைப் பருவம் அடைந்த பின்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்று எம்மில் பலர் எண்ணுகிறோம். அது ஒரு மிகப் பெரிய தவறான எண்ணமாகும். பலம் பொருந்தியவர்களாக, ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்கும் இளம் பருவத்தின்போதே நாங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆன்மீக ஈட்டங்களையெல்லாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதியே பகவான் சிறுவர் - ஆன்மீகக் கல்வி என்பதை உருவாக்கி உலகெங்கும் வாழுகின்ற சிறுவர்களைச் சமய உணர்ச்சிக்கு அப்பால் ஒன்றிணைத்திருக்கிறார்.*

*குழந்தைப் பருவம், பள்ளிப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் இந்த நான்கு நிலைகளிலும் மனித உடல் இயற்கை வழியைப் பின்பற்றிச் செல்கிறது. ஒவ்வொரு பருவமும் குறுகிய காலமே இயங்கும். நமக்கு எவ்வித முன் அறிவிப்பும் தராது நம்மை அறியாமலே அடுத்த நிலைக்கு மாற்றம் அடையும். இளமைப் பருவம் என்றும் நிலைத்திருக்கும் என்ற எண்ணத்துக்கு அப்பருவம் ஊக்குவிக்கும் காம உணர்ச்சிகள் காரணமாக அமையும். அக் கவர்ச்சியில் நாம் எம் நிலை மறந்து மிருக உணர்ச்சிகளால் கவரப்பட்டு அவை எம்மைத் தவறான வழியில் இழுக்க முனையும்போதெல்லாம் அவற்றை எதிர்த்துத் தைரியமாக நிற்பதற்குச் சுவாமி துணை நிற்கின்றார். அதற்காகப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் நல்லவர்களோடு உறவாடுமாறும் கூறுகிறார். தூசி காற்றுடன் சேரும்போது மேல்நோக்கிச் செல்கிறது. அது தண்ணீருடன் சேரும்போது பாதாளத்திற்குச் செல்கிறது. இரும்பு நெருப்புடன் சேரும்போது ஒளி பெறுகிறது, தூய்மை அடைகிறது. ஆனால் அது மண்ணுடன் சேரும்போது துருப்பிடித்து மண்ணோடு மண்ணாகிப் போகிறது.*


*நாங்கள் ஒவ்வொருவரும் உடலுக்கு உணவளிப்பது போல உள்ளத்துக்கும் உணவளிக்க வேண்டும். வேளை தவறாது ஒழுங்கு முறையிலமைந்த தியானமே காலை உணவாக வேண்டும். பிரார்த்தனை செய்தல், சமயநூல் வாசித்தல், ஸ்மரணை செய்தல் என்பனவற்றை எமது நாளாந்த வாழ்வோடு இணைத்துக் கொள்ள வேண்டும்.*

*ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் இடைவிடாது தியானமும் பிரார்த்தனையும் செய்தால் நாம் உன்னதமான நிலையை அடைய முடியும். ஆன்மீக ஒழுக்கத்தில் தியானம் என்பதனை முறைப்படி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. ஆரம்பத்தில் அதற்காகத் தினமும் சில நிமிடங்களை ஒதுக்க வேண்டும். அப்போது நீங்கள் அதில் பெறுகின்ற பேரின்பத்தை உணருகின்ற பொழுது உங்கள் விருப்பப்படி காலத்தை நீடிக்கலாம். இரவு நேர ஓய்வுக்குப் பின், அதிகாலை நேரம் உடல் சுறுசுறுப்புடன் இருக்கும். அந்த நேரம் பகல் பொழுதைப் போலக் குழப்பங்கள் எம் மீது படிந்திருக்காது. எனவே, சூரிய உதயத்திற்கு முன்பாக தியானம் செய்தல் மிகமிக நல்லது.*

*தியானத்தின்போது, தீபம் அல்லது மெழுகுவர்த்தியை உங்கள் முன் ஏற்றி வைத்துக் கொள்ளுங்கள். அத்தீபத்திற்கு முன்பாகப் பத்மாசனத்தில் அல்லது உங்களுக்கு ஏற்ற வசதியான ஆசனம் ஒன்றில் அமருங்கள். உங்கள் முன் எரிகின்ற சுடரைச் சிறிது நேரம் உற்று நோக்குங்கள். பிறகு கண்களை மூடிக் கொண்டு அச்சுடர் எமது புருவங்களின் மத்தியில் இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். பின்பு அச்சுடர் செல்கின்ற பாதையை அவதானித்துக் கொள்ளுங்கள். அச் சுடர் அப் பாதையைப் பிரகாசிக்கச் செய்து கொண்டே எமது இதயக் கமலத்தை நோக்கி நகர்வதை உணருவீர்கள். அச்சுடரானது இதய கமலத்துள் நுழையும் போது அதன் இதழ்கள் ஒவ்வொன்றாக விரிவதைப் போல - எமது எண்ணங்களும் உணர்வுகளும் அந்த ஜோதியிலே மூழ்கி - இதயக் கமலத்தில் இருக்கின்ற இருளைப் போக்குவதாக எண்ணிக் கொள்ளுங்கள். ஜோதியின் ஒளி விரிந்து எமது உறுப்புகள் எல்லாவற்றுக்கும் பரவும். அதனால் எமது சரீரமானது தீய செயல்களில் ஈடுபடமாட்டாது. பின்னர் அது அன்பு ஜோதியாகப் பிரகாசிக்க தொடங்கும். சத்தியத்தை, மென்மையாகவும் இனிமையாகவும் "நா" பேசத் தொடங்கும். கண்கள், காதுகள் அனைத்திலும் ஜோதி பிரகாசிக்க தீய ஆசைகள் எல்லாம் அழிந்துவிடும். எமது இதயத்தில் ஜோதி மிக மிகப் பிரகாசமாக ஒளிரும். அது எப்பொழுதும் நல்ல வழியில் செல்ல எம்மை வழிகாட்டிக் கொண்டேயிருக்கும். கண்கள் தீய காட்சிகளைப் பார்க்க விரும்ப மாட்டாது. தீங்கு செய்யக் கூடிய இழிவான செயல்பாடுகளில் ஈடுபட அந்த ஜோதி எம்மை அனுமதிக்காது.*

*அதனால் இந்த ஜோதியைக் காணுகின்ற அனைவரும் பேருணர்ச்சியின்பால் நீடித்திருக்க வேண்டும் என சுவாமியின் அவதார திருநாளில் திடசங்கற்பம் பூணுவோமாக...*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
உங்கள் செயல்கள் இன்று லாபமாகும். பொருளாதார நிலை உயரும். மகிழ்ச்சியான நாள். நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். செல்வாக்கு உயரும்.

**இடபம்**
பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். அணுகு முறையால் தடைகளை எல்லாம் சரி செய்து முன்னேற்றத்தைக் காண்பீர்கள். உடல் நிலையில் இருந்த பாதிப்புகள் விலகும். சுறு சுறுப்பாக செயல்படுவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். நவீன பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். நீண்ட நாள் பிரச்னை ஒன்றிற்கு முடிவு காண்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்**
மனதில் தன்னம்பிக்கை உண்டாகும். துணிச்சலுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நெருக்கடிகள் நீங்கும். வழக்கு விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும்.

**சிம்மம்**
உங்கள் செல்வாக்கு உயரும். செயல்களில் ஆதாயம் அதிகரிக்கும். அரசு வழியிலான முயற்சி ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் திறமை வெளிப்படும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**கன்னி**
உங்கள் வார்த்தைக்கு மதிப்பு அதிகரிக்கும். வரவுகளில் இருந்த தடைகள் அகலும். பொருளாதார நிலை உயரும். கடன்களை அடைப்பீர்கள். எதிர்பார்த்த பண வரவு வந்து சேரும். குடும்ப நெருக்கடிகள் விலகும்.

**துலாம்**
மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தினர் நலனுக்கான ஒரு முடிவை துணிச்சலுடன் எடுப்பீர்கள். பணியிடத்தில் மற்றவர்களின் ஒத்துழைப்பால் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**விருச்சிகம்**
வாகனப் பயணத்தில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் செல்வீர்கள். திடீர் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். குடும்பத்தினர் விருப்பங்களை நிறைவேற்றுவதில் தடை ஏற்படும்.

**தனுசு**
எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். திட்டமிட்டு செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தேவைகள் நிறைவேறும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்**
பிரச்னைகளை சரி செய்வீர்கள். மகிழ்ச்சி கூடும். போட்டியாளர்கள் விலகிச் செல்வார்கள். பொருளாதார நிலை உயரும். இழுபறியாக இருந்த ஒரு செயல் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

**கும்பம்**
நிதிநிலை உயரும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். நீங்கள் எதிர்பார்த்ததை அடைவீர்கள். இழுபறியாய் இருந்த ஒரு முயற்சி இன்று நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயத்தைக் காண்பீர்கள்.

**மீனம்**
பேச்சிலும் செயலிலும் கவனம் தேவைப்படும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். மற்றவர்களால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். நிதானத்துடன் செயல்பட வேண்டிய நாள். முயற்சிகள் எதுவும் வேண்டாம்.

# தமிழக காங்கிரஸ் மோதல் அணிகளில் மேலும் பிரிவு

சென்னை, நவ. 23

தமிழக காங்கிரஸ் தலைவர் பதவி விவகாரம் தொடர்பாக, டில்லியில் அந்தக் கட்சியின் நாடாளாவிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை சந்தித்து பேசிய குழு தலைவர்கள் இடையே, திடீர் மோதல் வெடித்துள்ளது.

தமிழக காங்கிரசில், மாநில தலைவர் அழகிரி ஆதரவாளர்களுக்கும், பொருளாளர் ரூபி மனோகரன் ஆதரவாளர்களுக்கும் இடையே, குழு மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் அழகிரிக்கு எதிராக, சட்டசபை காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை, முன்னாள் தலைவர்கள் தங்கபாலு, இளங்கோவன், திருநாவுக்கரசர், கிருஷ்ணசாமி ஆகிய ஐவரும் ஓர் அணியாக செயல்படுகின்றனர்.

இவர்களில் திருநாவுக்கரசர் மனோகரனுக்கு ஆதரவாக பேசியுள்ளார். அந்தக் கட்சியின் தலைவருடன் பேசிய போதே இடையில் அவர் எழுந்து சென்றுவிட்டார் என்று கூறப்படுகின்றது. இதையடுத்து அந்த அணியிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

# சூரியனை ஆய்வு செய்வதற்காக விண்கலம் ஏவுகிறது இந்தியா!

கன்னியாகுமரி, நவ. 23

சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா விண்கலம் அனுப்பப்படவுள்ளதாக இஸ்ரோ முன்னாள் தலைவரும், விக்ரம் சாராபாய் விண் வெளி ஆய்வு மைய ஆலோசகருமான சிவன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் தமிழ்நாட்டின் - நாகர்கோவில் வந்தார். அங்கு செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இஸ்ரோவில் வரும் சனிக்கிழமை பி.எஸ்.எல்.வி. சி4 என்ற 54-வது பி. எஸ். எல். வி. ஏவூர்தி விண்ணில் செலுத்தப்பட இருக்கிறது. அதில் கடல் ஆய்வுக்கான செயற்கை கோளும், 8 வணிக ரீதியான செயற்கைக்கோள்களும் அனுப்பப்பட உள்ளது. அதன்பிறகு அடுத்த கட்டமாக எஸ்.எஸ்.எல்.வி. செயற்கை கோள் செலுத்தப்பட இருக்கிறது. ஆதித்யா எல்.ஒன். மற்றும் ககன்யான் செயற்கைக்கோள் போன்றவைகள் செலுத்தப்பட இருக்கின்றன.

நிலவுக்கு மனிதனை அனுப்பும் ககன்யான் விண்கலம் செலுத்துவதற்கு முன்பு பல்வேறு கட்ட சோதனை ஏவூர்திகள் செலுத்தப்பட வேண்டி இருக்கிறது. எனவே அந்த சோதனைகள் நடைபெறும்.

சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா எல்.ஒன். விண்கலம் தயாராகி வருகிறது. அடுத்த ஆண்டு இது விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# பயங்கரவாதிகளின் புகலிடமாக தமிழ்நாடு மாறி வருகின்றது!

## தமிழக பா. ஜ. க. குற்றச்சாட்டு

சென்னை, நவ. 23

பயங்கரவாதிகளின் புகலிடமாக தமிழகம் மாறி வருகிறது என பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிற்றர் பதிவு: தி. மு. க. ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழகஉளவுத் துறை ஆழ்ந்த உறக்க நிலையில் உள்ளது. இதனால், தமிழகம் பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறி வருகிறது. மங்களூர் குண்டுவெடிப்பு குறித்த முதல்கட்ட விசாரணையில், ஷரீக், போலி அடையாள அட்டையை காட்டி, கோவையில் தங்கியிருந்தது தெரியவந்துள்ளது.

கோவை கார் வெடிப்பு ஒரு பயங்கரவாத செயல் என்று பாஜக ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகிறது. அரசு அதை தொடர்ந்து மறுக்கிறது. ஷரீக் கோவையில் தங்கியது மற்றும் தண்டனையின்றி செயல்படும் பயங்கரவாதிகளுடன் அவருக்கு உள்ள தொடர்பு குறித்து பாஜக சந்தேகம் எழுப்புகிறது. அதையும் அரசு மறுக்கிறது - என்றும் அவர் கூறியுள்ளார்.



# சிறுவர் தொழிலாளர்கள் 180 வீதமாக அதிகரிப்பு!

சென்னை, நவ. 23

தமிழ்நாட்டில் சிறுவர் தொழிலாளரின் எண்ணிக்கை 180வீதமாக அதிகரித்துள்ளதாக ஆய்வுமூலம் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 29 சதவீதம் உள்ளனர். 14 முதல் 18 வயதுள்ள குழந்தைகள் 10 சதவீதம் உள்ளனர். சிறுவர்கள், பாடசாலைகள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் இருக்க வேண்டும். ஆனால், வறுமை, பொருளாதார சூழ்நிலை, முறையில்லா வருமானம் போன்ற பல்வேறு காரணங்களினால் சிறுவர்கள் வேலைக்குச் சென்று வருகின்றனர்.

2021ஆம் ஆண்டு சி.ஏ.சி.எல். என்ற அமைப்பு நடத்திய ஆய்வில், தமிழகத்தில் 180 சதவீதம் குழந்தை தொழிலாளர்கள் அதிகரித்துள்ளதாக அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டுள்ளது. குறிப்பாக விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலைகளில் குழந்தை தொழிலாளர்கள் இறந்தனர் என்று ரூ.14 இலட்சம் வரை அபராதம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் இருந்தும் குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அறிய வருகின்றது.

ஈழநாடு



## தொழில்வாய்ப்பு மோசடி; மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, நவ. 23

ருமேனியா தொழில் வாய்ப்பு மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட இத்தாலிய பிரஜை உள்ளிட்ட மூவர் எதிர்வரும் 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏனைய இலங்கை பிரஜைகள் இருவருக்கும் தலா 05 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணை வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ருமேனியாவில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி சட்டவிரோதமாக நேர்முகத் தேர்வு நடத்திய நால்வர் பதுளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

ருமேனியாவில் தொழில் பெற்றுத்தருவதாக, வேலை வாய்ப்பு பணியகத்திற்கு அறிவிக்காமல் முகப் புத்தகத்தில் விளம்பரம் செய்யப்பட்டே குறித்த நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

பதுளை பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்ட இந்த நேர்முகத் தேர்வில் 30 பேர் வரை கலந்து கொண்டனர். (அ)

## தங்க நகைகளுடன் தம்பதியர் சிக்கினர்

கொழும்பு, நவ. 23

புத்தளத்தில் திருடப்பட்ட 2.7 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து நான்கு தங்க வளையல்கள், இரண்டு தங்கச் சங்கிலிகள், இரண்டு தங்க நெக்லஸ்கள், இரண்டு தங்கப் பதக்கங்கள், ஆறு மோதிரங்கள், ஐந்து ஜோடி தங்கக் காதணிகள் மற்றும் நான்கு வெள்ளி மோதிரங்கள் ஆகியன புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் 31 மற்றும் 41 வயதுடைய புத்தளத்தைச் சேர்ந்தவர்களாவர். புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இன்று முதல் நாடு முழுக்க விசேட சுற்றிவளைப்புகள்

கொழும்பு, நவ. 23

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, உணவுப் பொருட்களை அதிக விலையில் விற்பனை செய்வோர் மற்றும் பாவனைக்கு உகந்ததற்ற உணவுகளை விற்பனை செய்வோரை தேடி இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

அவ்வாறானவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# மக்களை கைவிட்டு நான் ஒருபோதுமே ஓடவில்லை!

### சபையில் கூறினார் மகிந்த ராஜபக்ஷ
### பட்ஜெட்டை ஆதரிக்கவும் கோரிக்கை



கொழும்பு, நவ. 23

வரவு-செலவுத் திட்டத்தில் திருத்தங்களுக்கு அமைய அனைவரும் ஆதரவளிக்கவேண்டும் என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தாம் ஒருபோதும் மக்களை விட்டு ஓடியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி நிதியமைச்சர் என்ற வகையில் வரவு-செலவுத் திட்டத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கப் போவதாக குறிப்பிட்டார்.

அத்தகைய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு நாம் செய்ய வேண்டிய பல நீண்டகால மற்றும் குறுகிய கால செயற்பாடுகள் உள்ளன. இவை அனைத்தையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் செயல்முறையின் யதார்த்தங்கள், அத்தகைய மூலோபாயத் திட்டத்தில் நாம் நகர்ந்தால் மட்டுமே சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும். எனவே நாம் அனைவரும் திருத்தங்களுக்கு உட்பட்டு அதை ஆதரிப்பது முக்கியம்.

எங்களால் தாங்க முடியாத அளவுக்கு கடனை நல்லாட்சி அரசாங்கம் பெற்றுள்ளது. இது நாட்டுக்கும் இந்தச் சபைக்கும் இரகசியமில்லை.

இன்றைய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சில யோசனைகளை முன்வைத்தவர்கள் அந்த அரசாங்கத்தில் இருந்தனர். பொறுப்பேற்கச் சொன்னால், இல்லை என்கிறார்கள். அவர்கள் எப்போதும் பிரபலமான பக்கத்தில் இருக்க விரும்புகிறார்கள்.

அப்படிப்பட்ட வீரம் நமக்குத் தேவையில்லை. பிரச்னைகளையும் சவால்களையும் எதிர்கொள்வது நமது மனப்பான்மை. நான் ஒருபோதும் மக்களைவிட்டு ஓடியதில்லை. அப்படி நடக்காது-என்றார். (அ)

## உரிய வயதில் அடையாள அட்டை பெறாதோருக்கு ரூ. 2,500 அபராதம்

கொழும்பு, நவ. 23

15 வயதில் தேசிய அடையாள அட்டையை கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டும் என ஆட்பதிவுத் திணைக்களம் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய வயதில் அடையாள அட்டை பெறாத நபர்கள், அந்த வயதுக்கு மேற்பட்ட அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில், 2500 ரூபா அபராதம் விதிக்கப்படும்.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி 15 வயதை எட்டியவுடன் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சட்டம் உள்ளது.

கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு வருடமும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கை வெளியிடப் படுகின்றபோதிலும் 50 வீதமான பாடசாலை மாணவர்களின் விண்ணப்பங்கள் அனுப்பப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் குறித்த பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவிக்கும் வகையில் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

## உலகின் மிகப்பெரிய நீலக்கல் விற்பனை செய்யப்படவில்லை



கொழும்பு, நவ. 23

உலகின் மிகப்பெரிய ஒற்றை இயற்கை நீலக்கல் இன்னும் விற்பனை செய்யப்படவில்லையென தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் விராஜ் டி சில்வா தெரிவித்தார்.

சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண் காட்சி-2023 முதல் பதிப்பை அறிவிக்கும் நிகழ்வின் பின்னர், கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 2023 ஜனவரி 7 முதல் 9 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

கடந்த ஆண்டு இரத்தின புரியில் கண்டெடுக்கப்பட்ட 503.2 கிலோ எடையுள்ள நீலக் கல் கின்னஸ் உலக சாதனையில் இடம்பிடித்துள்ளதாக அவர் கூறினார். இந்த, உல கின் மிகப் பெரிய நீலக்கல் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி, சுவிட்சர்லாந்தில் உள்ள இரத்தினக்கல் ஆய்வகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த கல் லுக்கான கொள்வனவாளர் ஒருவரை நாம் இதுவரை கண்டறியவில்லை. எனவே, வாடிக்கையாளர் குறித்த கல்லை டுபாய்க்கு மாற்ற முடிவு செய்துள்ளனர்-என்றார். (அ)

## தேசிய மருந்து கொள்கையில் திருத்தம் செய்வதற்கு அனுமதி

கொழும்பு, நவ. 23

தேசிய மருந்துக் கொள்கையில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2005ஆம் ஆண்டு மருந்துக் கொள்கை அறிவிக்கப்பட்டு ஏறக்குறைய 15 ஆண்டுகள் கடந்துவிட்டதாகவும் தற்போதைய தேவைகளுக்கு ஏற்றவாறு கொள்கையை திருத்தியமைக்க வேண்டியதன் அவசியத்தை அரசு அங்கீகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்காக சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் தேசிய மருந்துக் கொள்கையில் திருத்தம் செய்ய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## 78,000 போதை வில்லைகளுடன் பொலிஸாரினால் ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 23

முகத்துவாரம் மற்றும் களுபோவில ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது ஒரு தொகை போதைவில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு வடக்கு குற்றவிசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் 78,700 போதை வில்லைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். சந்தேக நபர் இந்த போதைப் பொருள் தொகையை சட்டவிரோதமான முறையில் வான் மற்றும் கடல் மார்க்கமாக கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஏரியில் ஆணின் சடலம்!

கொழும்பு, நவ. 23

எம்பிலிப்பிட்டிய சந்திரிகா ஏரியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சந்திரிகா ஏரியில் சடலம் ஒன்று மிதப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் உயிரிழந்தவர் 64 வயதுடைய துங்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவராவர். உயிரிழந்தவரின் மனைவி சடலத்தை அடையாளம் காட்டினார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பான பிரேத பரிசோதனைக்காக எம்பிலிபிட்டிய வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# துப்பாக்கிகள், ரவைகளுடன் முல்லைத்தீவில் ஒருவர் கைது!



முல்லைத்தீவு, நவ. 23

உள்ளூர் துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக் குட்பட்ட அம்பகாமம் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு உள்ளூர் துப்பாக்கிகள் மற்றும் ரவைகள், ஈயம் என்பன வற்றுடன் சந்தேக நபர் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (அ)

# சட்டவிரோத மதுபானத்துடன் நீர்கொழும்பில் நால்வர் கைது

கொழும்பு, நவ. 23

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோத மது பானங்களுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

நீர்கொழும்பு, குரான பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சட்டவிரோத மதுபானங்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 34, 38, 51 மற்றும் 63 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் கட்டுநாயக்க மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட 45 லீற்றர் மது பானங்களும் மீட்கப்பட்டுள்ளன. (அ)

# டெங்கு நோயளர்கள் எண்ணிக்கை மன்னார் மாவட்டத்தில் அதிகரிப்பு!

## மருத்துவர் ரி.வினோதன் தகவல்

மன்னார், நவ. 23

மன்னார் மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படும் நிலையில், காய்ச்சல்,தலையிடி உள்ளடங்கலாக டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்கு சென்று உரிய சிகிச்சை யை பெற்றுக்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் தற்போது சில இடங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மன்னார் நகரம், தோட்டவெளி,எருக்கலம்பிட்டி போன்ற பகுதிகளில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 118 டெங்கு நோயாளர்கள் இந்த வருடத்தில் அதிக அளவில் குறிப்பிட்ட மாதத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தற்போது நவம்பர் மாதத்தில் தற்போது வரை 33 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் மன்னார் நகரம் மற்றும் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமம் ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள்.

இவ்வருடம் தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 236 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.எனினும் மரணங்கள் எதுவும் நிகழவில்லை.பல நோயாளர்கள் தற்போது குருதி கசிவு நிலையுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உற்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடுமையான போராட்டத்தின் மத்தியில் அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு நோய் குணமாக்கப்பட்டு வருகின்றது.

எனவே பொது மக்கள் தமது வீடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து அவற்றை உடனடியாக சுத்தம் செய்யவேண்டும்.

குறிப்பாக நீரை சேகரித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் தாங்கிகள் மற்றும் வீட்டினுள் அடிக்கடி சுத்தப்படுத்த படாத சிறிய பாத்திரங்கள் மற்றும் பூச்சாடிகள் போன்றவற்றில் டெங்கு





நுளம்பு முட்டையிட்டு, குடம்பி, கூட்டுப்புழுக்கள் உறுவாகி டெங்கு நுளம்பின் வளர்ந்த பருவம் உருவாகின்றது.

எனவே பொது மக்கள் இவ்விடயம் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். மன்னார் மாவட்டத்தில் ஏனைய மாவட்டம் போன்று இல்லாது சிறிய நீர்ப் பாத்திரங்கள் மற்றும் நீர்நிலைகளில் டெங்கு நுளம்பு உருவாகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் குறித்து மக்கள் அவதானத்துடன் செயல்பட்டு,நுளம்பு உற்பத்தியாகும் சந்தர்ப்பத்தை இல்லாது செய்ய வேண்டும்.

மேலும் மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் கிராம மக்கள் தற்போது பருவகால கடற்தொழிலை மேற்கொள்ள தமது வீடுகளை பூட்டி விடத்தல் தீவில் தங்கி உள்ளனர்.

இதனால் குறித்த வீடுகளில் நீர் தேங்கி இருக்கக்கூடிய பாத்திரங்கள் மற்றும் நுளம்பு பெருக்கக்கூடிய இடங்களை கண்டு பிடிப்பதில் சுகாதார துறையினருக்கு பாரிய பிரச்னைகள் உள்ளன.

எனவே பொதுமக்கள் உடனடியாக தமது வீடுகளுக்குச் சென்று அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் போது தமது வீடுகளை திறந்து நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அதனை அகற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

மேலும் காய்ச்சல் ஏற்பட்டவர்கள் வீடுகளில் அதிக நாட்களாக சுய சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே டெங்கு பரவும் இடங்களில் உள்ளவர்கள் காய்ச்சல் ஏற்பட்டால் அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்கு சென்று பரிசோதித்து உரிய சிகிச்சைகள் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது பல டெங்கு நோயாளர்கள் குருதிக் கசிவு ஏற்பட்ட பின்னர் வைத்தியசாலைக்கு வரும் நிலை காணப்படுகின்றது. இதனால் அவர்களின் நோய் நிலையை குணமாக்க வைத்தியர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே டெங்கு நோய் அறிகுறிகள் காணப்படுகின்றவர்கள் அருகில் உள்ள அரச வைத்திய சாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)

# சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில் புனரமைக்கப்பட்ட கட்டடம் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

வட்டுக்கோட்டை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் புதுப்பிக்கப்பட்ட கட்டடத் தொகுதியும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நேற்றுக் காலை பாடசாலையின் அதிபர் ப.சிவலோகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது விருந்தினர்களால் புதிதாக புனரமைப்பு பெற்ற வித்தியாசாலை வளாகம் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டதோடு, நிறுவுநர் சிலையும் நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பேராசிரியர் ராஜராஜன் மற்றும் அகிலா ராஜராஜன், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வித்தியாசாலையின் நிறுவுநரின் முப்பாட்டன் ஜசிக்கன் ராஜலதனால் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக மாணவர்களின்



நலன் கருதி உருவாக்கப்பட்ட திறன் வகுப்பறையும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாணவர் கலைநிகழ்வுகளும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வினபோது சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் அதிபர்.ப.சிவலோகநந்தன்,பேராசிரியர் ராஜராஜன், அகிலா ராஜராஜன், வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், வித்தியாசாலை நிறுவுநரின் முப்பாட்டன் ஜசிக்கன் ராஜஸ்தான், சக்கரத்தை உபதபாலதிபர், பழைய மாணவர் சங்கச் செயலாளர் செந்தில்குமார், விரிவுரையாளர் ஆஷா,பழைய மாணவர்கள், சமூக மட்ட அமைப்பினர்,பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் , பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த வித்தியாலையின் புனரமைப்பிற்கு எட்டு மில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்பை பேராசிரியர் ராஜராஜன் மற்றும் அகிலா ராஜ ராஜன் மற்றும் கே.என்.பி ட்ரஸ்ட் லிமிட்டெட் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடமராட்சியில் தொடரும் களவு; இளைஞன் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ. 23

வடமராட்சிப் பகுதியில் தொடர் களவுச் சம்பவங்களில் தொடர்புபட்ட இளைஞர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

வடமராட்சி, துன்னாலை, குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவின் பணிப்பின் பேரில் உப பொலிஸ் ரட்ணாயக்க தலைமையிலான குழுவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்தபோது வடமராட்சிப் பகுதியில் 9 வீடுகளில் புகுந்து களவாடியுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.(அ-2)

# பஸிலின் வருகையினால் எதிரணிகள் நடுக்கத்தில்!

## கூறுகிறார் ரோஹித அபேகுணவர்தன

கொழும்பு, நவ.23

**''பஸில் ராஜபக்ஷவின் வருகையால் எதிரணிகள் பீதியில் உள்ளன. அதனால் தான் அவருக்கு எதிராக சேறுபூசும் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.''-என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.**

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

பஸில் ராஜபக்ஷ செல்லாக் காசாகிவிட்டார், அவரால் முடியாது என சூளுரைத்து வந்த எதிர்க்கட்சிகள், அவரின் வருகையால் கலக்கமடைந்துள்ளன. மண்ணெண்ணெய் பட்ட பாம்புபோல துடிக்கின்றன. பஸிலுக்கு எதற்காக




இவ்வளவு பயம்? அவர் செல்லாக் காசெனில் எதற்காக அஞ்சவேண்டும்?

பொய்கள் புயல்போல வீசும். உண்மைதான் வெல்லும். அதற்கு காலம் செல்லும். அந்தவகையில் பஸில் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பது தெரியவரும். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தாலும், மொட்டு கட்சிக்கு பஸில் ராஜபக்ஷவே தலைமைத்துவம் வழங்குவார்-என்றார். (அ)

# மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளராக சிவராஜா

மன்னார், நவ. 23

மன்னார் மாவட்டத்திற்கான உதவித் தேர்தல் ஆணையாளராக வி. சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் முன்னிலையில் அவர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மன்னார் மாவட்டத்துக்கான உதவி தேர்தல் ஆணையாளராக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சிவராஜா மன்னார் மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்ட செயலாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தல் பிரசார செலவை கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, நவ. 23

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் தேர்தல் பிரசார செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)



# கெஹலியவுக்கு பிணை

கொழும்பு, நவ. 23

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அரசாங்க நிதியில் இருந்து ஜி.ஐ குழாய்களைக் கொள்வனவு செய்த வழக்கில், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வழக்கு விசாரணை முடியும் வரை குறித்த மூவருக்கும் வெளிநாடு செல்வதற்கு தடைவிதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ)

# நச்சு போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக ஜனாதிபதி செயலணி!

கொழும்பு, நவ. 23

நச்சுப் போதைப்பொருட்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பாவனையைத் தடுப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# எரிபொருள் அதிகரிப்பு வேலைத்திட்டம் தோல்வி!

## ஓட்டோச் சாரதிகள் சங்கம் கூறுகிறது

கொழும்பு, நவ. 23

எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்காக மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓட்டோக்களைப் பதிவு செய்யும் வேலைத்திட்டம் தோல்வியடைந்துள்ளதாக அகில இலங்கை ஓட்டோச் சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஓட்டோ பதிவுக்காக கட்டணம் வசூலிக்கத் திட்டமிட்டுள்ளதால், பல ஓட்டோச் சாரதிகள் அதற்கு ஆதரவளிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் சுதில் ஜயருக் குறிப்பிட்டார்.

ஓட்டோக்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்காக, அண்மையில் பதிவு செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேல்மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் ஓட்டோக்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படவேண்டும் எனவும், பதிவு செய்ததன் பின்னர் ஓட்டோக்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 10 லீற்றராக அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே, பதிவுக் கட்டணம் அறவிடுவதற்கு மாகாண சபை தீர்மானித்துள்ளதால், பெரும்பாலான ஓட்டோச் சாரதிகள் இந்த வேலைத்திட்டத்தில் இணைய மறுத்துள்ளதாக அகில இலங்கை ஓட்டோச் சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.(அ)

# 80 வீதமான கைதிகள் போதைக்கு அடிமை!

## நீதி அமைச்சர் தகவல்

கொழும்பு, நவ. 23

நாட்டில் உள்ள சிறைச்சாலை கைதிகளில் 80 வீதமானோர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகசந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 26, 000 சிறைக் கைதிகள் உள்ளனர். இவர்களில் 80 சத வீதமானோர் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# பஸிலும் பரிவாரங்களும் விமான நிலையத்தில் உண்டு களித்த கட்டணத்தை செலுத்தவில்லை!



கொழும்பு, நவ. 23

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இலங்கை வந்த முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரமுகர் சேவைகளைப் பயன்படுத்தியதற்கான கட்டணத்தையும், பிரமுகர் ஓய்வறையில் பிரமாண்ட வரவேற்பில் வந்த விருந்தினர்களுக்கு வழங்கப்பட்ட உணவுக்கான கட்டணத்தையும் இன்னும் செலுத்தவில்லை.

பஸில் அமைச்சராகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராகவோ இல்லாத நிலையில், விமான நிலையத்தின் பிரமுகர் ஓய்வறையைப் பயன்படுத்துவதற்கு அவருக்கு உரிமை இல்லை. மேலும் அவர்களில் பெரும்பாலோர் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் தொழிற்சங்கமொன்று குறிப்பிட்டது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கேட்டரிங் சேவை அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டபோது, பஸில் ராஜபக்ஷவின் பிரமாண்ட வரவேற்பில் பிரமுகர் அறையில் உணவு வழங்கியதை உறுதி செய்தனர், ஆனால் அவர்கள் இன்னும் இந்த உணவுக்கான கட்டணத்தை விமானப் போக்குவரத்து ஆணையத்திடம் இருந்து பெறவில்லை.

பஸில் விமான நிலையத்தின் 'கோள்ட் ரூட்' சேவை ஊடாக வந்திருந்தார். இந்த சேவையைப் பயன்படுத்துவதற்கு ஒரு நபருக்கு 200 அமெரிக்க டொலர்களுக்கு மேல் செலவாகும்.

பிரமுகர் ஓய்வு பகுதியில் இரண்டு அறைகள் உள்ளதாகவும், பெரமுனவைச் சேர்ந்த குறைந்தது 100 பேர் பஸிலை வரவேற்க கோல்ட் ரூட் சேவையில் கூடியிருந்ததாகவும், பிரமுகர் கார் தரிப்பிடமும் பயன்படுத்தப்பட்டதாகவும் வட்டாரங்கள் தெரிவித்தன.

பஸிலும், பரிவாரங்களும் வி.ஐ.பி சேவையை பயன்படுத்தியதற்கு இது வரை பணம் செலுத்தவில்லை.

இந்த பயணத்தை யார் செலுத்துவார்கள் என்பது தெரியாமல் விமான நிலைய அதிகாரிகள் திண்டாடி வருகிறார்கள். (அ)

# சுந்தரபுரம் ஜன்னல்களும் கதவுகளும்

- கலாநிதி சிறில் குணபால

*"நான் அந்த கட்டிடத்தைப் பார்த்தேன். யாழ்ப்பாணம் முழுவதும் நடந்து சென்ற பின்னர் தான் இதனை விட அந்த சூழலை நன்கு புரிந்துகொண்டு பின்னர் வரைந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது வாசு".* நான் அவ்வாறு கூறியதும் வாசுதேவன் என்னிடம் நெருங்கி வந்து மிகவும் தாழ்ந்த குரலில்...

*"எனக்கு அன்றே தெரியும்... ஆனால் நான் தமிழன் ... அவற்றையெல்லாம் சொல்லிவிட்டு இல்லாத பிரச்சினையை ஏன் உருவாக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு, நடப்பது நடக்கட்டும் என்று இருந்துவிட்டேன்".*

✦ ✦ ✦ ✦

*"போரில் யாழ் மக்கள் தோற்றுவிட்டனர். அதன் நன்மை தீமை பற்றி நான் பேசப்போவதில்லை. நான் கொழும்பில் பிறந்தேன். சென் பீற்றர்ஸில் கல்வி கற்றேன். ஆனால் ஆக்கிடெக்ச்சரின் மூலம் ஓர் இனத்தை துன்புறுத்த முடியும் என்பது எனக்கும் தெரியும். நீ அதனை புரிந்து வைத்திருக்கின்றாய்."*

**பிரேமானிஷங்ச- சந்திரரத்ன பண்டார**

### "ஆக்கிடெச்சர் மூலம் துன்புறுத்தல்"

இது மிகவும் ஆழமானதொரு கூற்று. மனச்சாட்சி உள்ள கட்டிடக் கலைஞர் ஒருவர் காலம் தாழ்த்தியேனும் இதனைப் புரிந்துகொண்டமை ஆறுதலாக உள்ளது. ஆனால் அதற்குள் அனைத்தும் நடைபெற்று முடிந்துவிட்டன.

"மனித தர்மத்திற்கு விரோதமான முறையில்" ஆக்கிடெக்ச்சர் மூலம் துன்புறுத்துவது பற்றிய யதார்த்த நிலை இவ்வாறுள்ளமை துரதிருஷ்டவசமானதாகும். முன்னணி கட்டிடக் கலைஞர்கள் தமக்கே உரித்தான பாணியிலான கட்டிடக் கலைநுட்ப வடிவங்களின் உருவாக்கத்தின் போது பழங்காலத்தின் கலைவடிவங்கள் இருக்கும் கதவு ஜன்னல்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றை தங்களது வீடுகளில் பொருத்திக் கொள்வது பொதுவாக நடைபெறும் ஓர் விடயமாகும். ஆனாலும், அந்த பழங்கால கதவு ஜன்னல்களில் போர் காரணமாக நடைபெற்று முடிந்த சமூகமயமாக்கப்பட்ட 'குற்றங்கள்' உள்ளதனை அவர்கள் அறியாமலா இருக்கின்றனர்? ஏனெனில் இந்த பழங்கால ஜன்னல் கதவுகளில் பெரும்பாலானவை யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டவை. இது குற்றமாகும்.

எமது கட்டிட நிர்மாணத்துறை தொழினுட்ப ரீதியில் முன்னேற்றமடைந்திருக்கின்ற போதிலும், படைப்பாக்கத்தின் அடிப்படையில் நவீன மாற்றங்களை எதிர்கொள்ளாத "கலாசாரமற்ற சிந்தனைகளை" அவை முன்னெடுத்துச் செல்கின்றதல்லவா?

*"எமது கிராமத்தில் கரோலிஸ் ஐயாவின் பாழடைந்த வீட்டில் இருக்கும் ஜன்னல்களை பணம் கொடுத்து வாங்குவதற்காக அங்கு சென்று பேசிவிட்டு வரமுடியுமா அம்மா?"*

*"ஏன்?"*

*"நான் கட்டும் வீட்டிற்கு தேவைப்படுகின்றது."*

*"உனக்குப் பைத்தியமா? அவன் கெட்டவன். அவன் செய்த பாவங்கள் எல்லாம் சேர்ந்து அவனை அங்கு கொன்றுப் போட்டு பணத்தை கொள்ளையடித்து விட்டது. அப்படிப்பட்ட ஓர் இடத்தில் உள்ள கதவு ஜன்னல்கள் எவ்வளவு தான் பெறுமதியானதாக இருந்தாலுமே, புதிதாக கட்டும் வீட்டுக்கு புது கதவு ஜன்னல்களை வாங்கிப்போடுவது தான் நல்லது. நாசமாகிப்போன வீட்டில் இருக்கும் கதவு ஜன்னல்களை கொண்டு வந்து போட்டால் வீடு உருப்படுமா?"*

*"முட்டாள்தனமான சிந்தனை அம்மா. நான் வாழ்வதற்காக அந்த வீட்டை கட்டவில்லை. பாரம்பரியமான முறையில் தனக்கு கௌரவமாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கும் ஒரு புதிய பணக்காரருக்காக கட்டும் வீட்டிற்கு தான் அவை தேவைப்படுகின்றன..."*

**- நிலந்த பெர்ணாந்துவின் கலைத்துவமான வியாபாரம் சிறுகதையிலிருந்து..**

சரத் சந்திரஜீவ "இடம் பெயர்ந்த நுழைவிடங்கள்" (சிங்களத்தில்- சுந்தரபுரம் ஜனெல் பியன்பத்) என்ற பெயரில் வெளியிட்டிருக்கும் மகத்தான நூல் குறித்தே இந்த பதிவு அமைகின்றது. இந்த நூலை உருவாக்குவதற்கு தேவையான துணிவும், திட சங்கற்பமும், அர்ப்பணிப்பு மனோபாவமும் சந்திரஜீவவை தவிர வேறு எவருக்கும் இருக்கின் றதா என்பது பற்றி நானறியேன். பெரும்பாலானவர்களிடம் முற்போக்கு சிந்தனையுடனான கலைத்துவப் பார்வை இல்லை என்பது யாவரும் அறிந்த இரகசியமாகும்.

### சகதாபம்

அளவு, தரம், வரலாற்று நிகழ்வு ஆகிய அம்சங்களுடன் ஒப்பிடும் போது இந்நூல் முக்கியத்துவம் பெற்றதாக உள்ளது. இந்த நூலை வாசிப்பவர்களின் விழிகளில் நீர் கசிவது உறுதி. அந்தளவுக்கு அனுபவித்துணரக் கூடிய துயர் மேவிய உணர்வுகள் நூல் முழுவதும் விரவிக்கிடக்கின்றன. இந்த நூலைப் படைப்பதற்கு காரணமாக அமைந்த பின்னணி பற்றி பின்வருமாறு நூலில் அவரால் விபரிக்கப்படுகின்றது.

*"யாழில் வீடுகளில் காணப்பட்ட துளையிடப்பட்ட துவாரங்கள் குறித்த எனது முதலாவது தேடலுக்கான விடையைக் கண்டுபிடித்தேன். பழங்கால கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பற்றிய தகவலாக விடை கிடைத்தது. கொழும்பு சப்புமல் பவுண்டேசனில் உள்ள கலைப்பாடசாலையைச் சேர்ந்த எனது மாணவர்கள் மூலம் இச்செய்தியினைப் பெற்றுக்கொண்டேன். கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அப் பழங்கால கதவுகளும், ஜன்னல்களும் "யாழ்ப்பாணக் கதவுகளும், ஜன்னல்களும்' என விற்பனை செய்யப்பட்டதாக அம்மாணவர்கள் கூறினர். இரண்டாவதாக கட்புல மற்றும் ஆற்றுகைக்கலைகள் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரும் மொரட்டுவ பல்கலைக்கழக விரிவுரையாளருமான முற்று அலங்காரக் கட்டிடக் கலைஞர் பெமில் ஜெயவர்தன அவர்கள் கட்டிடக் கலைஞர்கள் மத்தியில் இப்பழமையான கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்கு அதிக கேள்வி இருந்ததாக என்னிடம் கூறினார். தானும் மனைவியும் தனது புது வீட்டுக்கு தேவையான பழமையான கதவுகளையும், ஜன்னல்கனையும் தேடி பாகொட, நுகேகொடயில் உள்ள ஓர் இடத்திற்கு சென்றிருந்தபோது அவை யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப்பட்டவை என அறிந்தவுடன் அவற்றை வாங்காது திரும்பிவிட்டதாக எழுத்தாளரும் கவிஞருமான நிஹால் என். காசிம் ஒரு முறை என்னிடம் கூறினார். லால் ஹெகோட பழமையான கதவுகள் விற்பனை செய்யப்பட்ட இடமொன்றுக்கு சில ஒளிப்படங்களைப் பிடிப்பதற்கு சென்றிருந்தார். ஆனால் அவர் அங்கே அனுமதிக்கப்படவில்லை. 2021ல் அவர் பின்வருமாறு மின்னஞ்சலில் பதிவொன்றை இட்டிருந்தார்.*

*"சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் பத்தரமுல்ல பிரதான வீதியிலுள்ள பழங்காலப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் சில யாழ் கதவுகளும் ஜன்னல்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு நான் கவலையடைந்தேன். கட்டிடக் கலைஞர்கள் போட்டிப்போட்டு அவற்றை விரைவாக வாங்கியதைக் கண்டேன். ஒரு நாள் இதுபற்றி சரத் சந்திரஜீவவுடன் கதைத்தேன். அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த போது தான் சேகரித்த கதவுகளும் ஜன்னல்களும் இல்லாத வீடுகளின் சுமார் ஒளிப்படங்களை என்னிடம் தந்தார். அந்த துளையிடப்பட்ட துவாரங்களையுடைய வீடுகள் இன்றளவும் அங்கு காணப்படலாம்"*

சரத் சந்திரஜீவவின் ஆய்வுப் பணி இந்த காலப் பகுதியிலேயே ஆரம்பமானது. (தற்போது பல்கலைக்கழக புத்திஜீவிகள் மத்தியில் காணப்படும் பிரதான பிரச்சினையே எதனை ஆய்வு செய்வது என்பதனை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது தான் என்று பலரால் கூறப்படுவதனையும் பரவலாக அறிய முடிகின்றது). மெல்ல மெல்ல அதற்கான நேரத்தை அர்ப்பணித்துக் கொண்டு யாழ்ப்பாண வீடுகளிலிருந்து அகற்றப்பட்ட கதவு ஜன்னல்களின் ஒளிப்படங்கள் பலவற்றை அவரால் சேகரிக்க முடிந்தது. அவற்றினூடாக சகதாபத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் "உணர்வுபூவ்வமான மனிதர்களிடம்" அவற்றை அவர் ஒவ்வொன்றாக அனுப்பி அந்த ஒளிப்படம் தொடர்பில் ஏற்படுகின்ற உணர்வுகளை கவிதையாக உருவாக்குமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் அவற்றை தொகுத்து இந்த நூலை படைத்துள்ளார். இந்த நூலுக்கு அவர் எழுதியுள்ள உப தலைப்பு 'முறிந்த இன நல்லிணக்கத்தின் மீதான சகதாபம்' என்பதாகும்.

### வடக்கும் தெற்கும்

சற்று ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மத்திய வர்க்கத்தினர் யாழ்ப்பாணத்தை நோக்கி சுற்றுலா செல்கின்றனர். ஓய்வுபெற்றவர்களும் தமது சங்கங்கள் மற்றும் நிறுவனங்களுடன் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து கொண்டு அங்கு விரைகின்றனர்.

உண்மையில் ஏன் அவர்கள் யாழ்ப்பாணம் செல்கின்றனர்? இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்தவா?

ஆனால் அவ்வாறான நோக்கத்துடன் செல்பவர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் பெருமளவானவர்கள் யாழ்ப்பாணம் செல்வது "மனிதாபிமான ரீதியிலான ஓர் பயணத்திற்காக' அல்ல என்பதனை அவர்களில் ஒரு சிலரின் முகநூல் பதிவுகளினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. அந்த ஒளிப்படங்கள் அறிந்தோ அறியாமலோ "அதிகாரத்துடன்" சம்பந்தப்பட்ட பார்வையை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றன.

நாம் அவற்றை மறந்துவிடுவோம்.

போர் வலயத்திலிருந்து வெளியேறி தென்னிலங்கை நோக்கி வருவதற்கு மிகவும் கடினமான போக்குவரத்து நடைமுறைகள் இருந்ததொரு காலப்பகுதியில் போரில் சேதமடைந்த வீடுகளில் இருந்த கதவு ஜன்னல்களை (கொழும்புக்கு) எவ்வாறு எடுத்து வந்தனர்?

கதவு ஜன்னல்களை பயணப் பொதிகளில் கொண்டு வருவதற்கான சாத்தியம் அறவே இல்லை. வாகனங்களில் அவற்றை கொண்டு வரவும் முடியாது. இவை லொறிகளில் ஏற்றப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கக் கூடும். இராணுவ பாதுகாப்பு அரண்களில் கதவு ஜன்னல்கள் ஏற்றப்பட்ட இந்த லொறிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படவில்லையா? இந்த லொறிகளில் ஏற்றப்பட்டவை யாழ் மக்களின் உழைப்பு மட்டுமல்ல. ஓர் நாட்டுப் பிரஜைகளின் கலாசார உரிமைகளின் அடையாளச் சின்னங்களாகும்.

இங்கு ஏதொவொரு விதமான வியாபரம் நடைபெற்றுள்ளமையை சந்தேகமின்றி அறிய முடிகின்றது. அதன் பங்குதாரர்களாக வட பகுதியைச் சேர்ந்த சிலரும்- தென் பகுதியைச் சேர்ந்த சிலரும் இணைந்து செயற்பட்டிருக்கின்றனர் என்று ஓரளவுக்கு ஊகித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இதனை தவிர வேறு ஏதேனும் இங்கு நடைப்பெற்றிருக்க முடியுமா?

அரசியல் அதிகாரத்துடன் இராணுவ பலமும் ஒன்றிணையும் போது செய்ய முடியாதது என்று எதுவுமே இல்லை. நீண்ட காலம் வளமானதொரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த பிரஜைகள் போர் காரணமாக தமது சொந்த வாழ்விடங்களைக் கைவிட்டு வெளிநாடுகளுக்கு சென்றிருக்கக் கூடும். அவர்கள் வாழ்ந்திருந்த முறையை அவதானிக்கும் போது மிகத்தெளிவாக தெரியும் விடயம் என்னவென்றால், நாட்டைக் கைவிட்டு செல்லும் தேவை அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இருந்திருக்கவில்லை என்பதே. உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவே அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர். அவர்கள் கைவிட்டு சென்ற வீடுகள் மற்றும் சொத்துக்களில் குறிப்பிடத்தக்களவு இராணுவ முகாம்களுக்காகவும், அரச உத்தியோகத்தர்களின் வாசஸ்தலங்களுக்காகவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அவற்றை உரியவர்களுக்கு அவர்கள் மீளக் கையளித்திருப்பார்களாயின், அவர்கள் எந்த நிலைமையில் அவற்றை கையளித்திருப்பார்கள்? யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசதிப் படைத்தவர்கள் வாழ்ந்த வீடுகளைத் தவிர சாதாரண மக்கள் வாழ்ந்த வீடுகளில் அலங்கார அருங்காட்சியகப் பெறுமதி கொண்ட கலைநுணுக்க வேலைப்பாடுகளிலான ஜன்னல் கதவுகள் இருந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்கக் கூட முடியாதுள்ளது.

போரின் பெயராலும் போர் வெற்றியின் பெயராலும் நடைபெற்ற கொள்ளையடிப்பு சம்பவங்களும் அதனை நியாயப்படுத்தும் செயற்பாடுகளும் குற்றச் செயல்கள் அல்ல என்ற அடிப்படையில் காலவோட்டத்தில் மண்ணோடு மண்ணாக மறைந்து போய்விட்டன.

### எழுதப்படாத வரலாற்றில்

இலங்கையின் பண்டைய வரலாற்று வம்சக் கதைகளில் கைவிடப்பட்ட அல்லது திட்டமிட்டு எழுதப்படாமல் விடப்பட்ட வரலாற்று விடயங்கள் பல இருக்கின்றமை இரகசியம் அல்ல. 'அரச அனுசரணையுடன்' எழுதப்படும் வரலாறானது நிச்சயமாக ஆட்சியாளர்களினால் விரும்பப்படும் ஓர் வரலாறாகவே இருக்குமே தவிர நிஜமான வரலாறாக அது ஒருபோதும் இருக்கப் போவதில்லை.

இந்நூல் வரலாற்றை முறையாக ஆவணப்படுத்துகின்ற ஓர் நூல் மட்டுமல்ல. வரலாற்று ஆவணங்களில் பொதுவாகவே கைவிடப்படுகின்ற "மனித நேயம் மிக்க சோக வரலாற்றையும், வேதனையான யதார்த்த நிலைமைகளையும்" ஆவணப்படுத்துகின்ற ஓர் நூலாக இந்நூல் விளங்குகின்றது.

**(09 ஆம் பக்கம் பார்க்க...)**

# சுந்தரபுரம் ஜன்னல்களும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நூலைப் பார்க்கும் போது ஒளிப்படங்களும், கவிதைகளும் மட்டுமே பார்வைக்கு புலப்படுகின்றன. ஒளிப்படங்கள் வெற்றுக் கண்களுக்கு புலனாகும் நிதர்சனங்களாகும். எனினும் அந்த ஒளிப்படங்களில் உள்ளடங்கியிருக்கும் சோகம் நூலின் மையக்கருவாக உள்ளது. அந்த சோகமான யதார்த்தத்தை முன்வைப்பதற்கான "அங்கீகாரமற்ற அனுமதியை" அனுபவ அறிவால் மட்டுமே மிகச் சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். அதேவேளை இந்த அனுபவ அறிவை "பிற்போக்கான மனநிலையிலிருந்து" விடுபட்டவர்களினால் மட்டுமே பயன்படுத்த முடியும். மறைமுக பார்வைகள் உள்ள மனிதர்களால் அதனை செய்ய முடியாது.

இன ஒற்றுமை, நல்லிணக்கம் பற்றியும் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியும் கட்டுரைகளும், படைப்புகளும் ஓரளவுக்கு வெளியாகிக் கொண்டு தான் இருக்கின்றது. அதேவேளை வருடம் தோறும் ஜெனீவா நகரில் தமது உரிமைகள் மீறப்பட்டமை மற்றும் மீறப்படுகின்றமை தொடர்பில் முறைப்பாடுகளும் முன்வைக்கப்படுகின்றன. ஆட்சியாளர்கள் தங்களது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக தமது நிகழ்ச்சி நிரலில் "ஏமாற்றல்" என்ற செயற்பாட்டை நீண்ட காலம் முன்னெடுத்துக் கொண்டிருப்பதே இதற்கு காரணம். இங்கு இன ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் தமிழ் மக்களின் உரிமைக்கான பாதைகள் "இருள் சூழ்ந்த பாதைகளாகவே" இன்னும் காணப்படுகின்றன. இதனூடாக வெளிப்படும் விடயம் என்னவெனில் எதுவும் நிரந்தரமாக இல்லை என்பதே.


சரத் சந்திரஜீவவின் இந்நூலினூடான பிரசன்னமானது குறிப்பிட்டதொரு காலம் தொடக்கம் வட பகுதியுடன் ஊடாடும் ஓர் பிரஜையின் அனுபவமாகவே உள்ளது. இதன் காரணமாக இன நல்லிணக்கத்தை தென்னிலங்கை முழுவதும் தூண்டச் செய்யும் ஆற்றல் மிக்க மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு தகவல் களஞ்சியமாக இந்த நூலைக் கருத முடியும்.

எழுதப்பட்ட வரலாற்றிலும், எழுதப்படுகின்ற வரலாற்றிலும் 'பௌதீக ரீதியிலான' விடயங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்படாத போதிலும், கண்களுக்கு புலப்படாத விடயங்களே தவிர்க்கப்படுகின்றன. அதாவது ஒலித்தலின்றி மௌனமாக இருக்கும் விடயங்களே தவிர்க்கப்படுகின்றன. இன நல்லிணக்கம் நிஜமாக வேண்டுமாயின் அதற்கான முக்கிய தேவையாக இருக்கின்ற கண்களுக்கு புலப்படாத கலாசார விடயங்களான "மன்னிப்புக்கோரலும்", 'அரவணைப்பும்' மிகவும் அவசியம். இந்த நூல் அதற்கான தேவையை முன்னிறுத்தி அனைவரையும் எழுச்சி பெறச் செய்கின்றது. அழுத்தம்- விதிகள்- அச்சுறுத்தல் ஆகியவற்றை கடந்து தம்மைச் சேர்ந்த பிறருக்காக ஆத்மார்த்தமாக எழுச்சிப் பெறாத மனிதநேய உணர்வின்றி சகதாபத்தை ஒருபோதும் பரப்ப முடியாது.

மனித தர்மம் அற்ற செயற்பாடுகளின் மிசேல்லத்தனமான நடத்தைகளையே அழிக்கப்பட்ட புத்தர் சிலைகளும், சிதைக்கப்பட்ட கலைப் படைப்புகளும் வெளிப்படுத்துகின்றன. ஓர் நாட்டின் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு "ஒரு சிற்பத்தையோ", "கலைப் படைப்பையோ" புனரமைக்க வேண்டிய அவசியமில்லை. புனரமைப்பு என்பது உத்தியோகபூர்வமானதொரு நிகழ்ச்சித்திட்டம் மட்டுமே. ஆத்மார்த்தமான சகதாபம் என்பது மனித உணர்வாகும். அந்த உணர்வை பிரதிபலிப்பதற்கு இந்நூல் ஓர் நிலைக்கண்ணாடியாக உள்ளது.

## சகதாபமும் வாசிப்பும்

இந்நூலினூடாக தம்மைச் சேர்ந்த பிறருக்காக என்பத்தியாறு பேர் தமது குரலை எழுச்சிப் பெறச் செயதுள்ளனர். இந்த ஒவ்வொரு எழுச்சியின் போதும் மிகவும் நேர்மை மிக்க மனிதநேய உணர்வைக் காண முடிகின்றது. அதனை ஆத்மார்த்தமாக உணரவும் முடிகின்றது. இந்த என்பத்தியாறு படைப்புகளில் எதனை நான் பாராட்டப் போகின்றேன்? எதிர்பார்ப்பு மழுங்கிய நிலையாகவும், சகதாபமாகவும், மனிதநேயமற்றவர்களின் இரக்கமற்ற நிலைப் பற்றிய கண்ணீர்த் துளிகளாகவும் நூல் முழுவதும் எல்லா கவிதைகளும் உள்ளன. சின்னஞ்சிறு நாட்டில், அந்நாட்டின் சிறியதொரு பகுதியில் வாழ்ந்த பிரஜைகளை பௌதீக ரீதியில் அழித்துவிட எடுக்கப்பட்ட முயற்சிகளின் கொடூரம் ஒவ்வொரு ஒளிப்படங்களிலும் பல நூறு கதைகளைக் கூறுகின்றன. போர் கொடூரமானது என்பது மட்டுமன்றி அது அழித்து சின்னாபின்னாமிக்கிய ஓர் கலாசாரத்தையும் மீளக்கட்டியெழுப்ப முடியாது என்பதையும் ஒளிப்படங்கள் வெளிப்படுத்துகின்றன. வீடொன்றை சிறந்த முறையில் தான் விரும்பியவாறு நிர்மாணித்துக்




கொள்வதையும், அந்த வீட்டில் வாழ்க்கையை வாழ்ந்து அனுபவிப்பதையும், எந்தவொரு மனிதனின் ஆழ்மன விருப்பங்களிலிருந்தும் எளிதில் அகற்றி விட முடியாது.

புத்தபெருமானை வழிபடும் நாட்டில் - அதுவும் மதத்தின் அடிப்படையில் அரசை ஆள்பவர்கள் நியமனம் பெறும் நாட்டில், மொழி என்ற தடுப்புச் சுவற்றை இன்னும் தகர்த்தெறியாமல் இருக்கும் நாட்டில் இந்த பேரழிவு நிகழ்ந்துள்ளது.

மனிதப்படுகொலைகளின் கொடூரத்தையும் மிலேச்சத்தனத்தையும் வெளி உலகுக்கு உரத்துக் கூறிய ராஜினி திராணகம முன்பொரு நாள் எழுதிய **"யாழிலிருந்து ஒரு கடிதத்தின்"** இறுதிப் பகுதியை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

*"15 வருடக் காலப் போர்*
*நம்பிக்கையெதுவுமற்ற*
*போர் இடை நிறுத்தம்.*
*மீண்டும் ஒழுங்கமைக்கவோ*
*கட்டியெழுப்பவோ முடியாது*
*எம் சமூகம் தன் ஆளுமையை இழந்துவிட்டது.*
*தன்னுள்ளே முற்றிலும் நொருங்குண்டு போயிற்று*
*தொடர்பாட, ஒரு மக்களமைப்புக் கூட இல்லை.*
*அழிவும் துயரமும் மனக்கசப்பும் தான் மிச்சம்*
*இதுவே*
*இச்சகாப்தத்தின் முடிவு*

(1987ல் எழுதப்பட்ட கவிதை. ஆங்கிலத்திலிருந்து தமிழில் நிர்மலா ராஜசிங்கம்)

ராஜினியின் குரலை பொருட்படுத்தாமல் மேலும் 15 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில் நிகழ்ந்து முடிந்தது ஒரு காலப்பகுதியின் இறப்பா? அல்லது வரலாற்றினதும் வருங்காலத்தினதும் இறப்பா? ஏனெனில், நாட்டை முற்றிலும் நாசமாக்கிய குடும்பம்- ஒரு சந்ததி திருட்டுப்பாதையில் சிறப்பாக மீண்டும் களமிறங்க முயற்சிப்பதும் பேரழிவாகவே தென்படுகின்றது. அழிவின் நன்மை ஒரு குடும்பத்திற்கு மட்டும் உரித்தானதா? தேசப்பற்று என்று கூறிக்கொண்டு தொடர்ந்து பழிவாங்கல் உணர்வை சுமந்துகொண்டிருக்க எவராவது தயாராக இருப்பார்களாயின் அதன் முடிவு தென்னிலங்கை ராஜினிகளின் அழிவாகவும் இருக்கக் கூடும்.

## நல்லிணக்கத்திற்கான ஓர் முதலீடு

இந்த படைப்பு குறித்து தனது 'கடந்தகால நினைவுகளை' எழுதியுள்ள சரத் சந்திரஜீவ ஓர் படைப்பாளியாகவும், ஆசிரியராகவும் தான் அனுபவித்துணர்ந்த யாழ்ப்பாணத்தை - அங்குள்ள அப்பாவி மக்களின் வாழ்க்கையையும், தனது தந்தையாரின் காலத்தில் சிறுபிள்ளையாக தான் கற்றுக்கொண்ட மனிதநேயம் பற்றியும் பல விடயங்களையும் தொடர்ச்சியாக முன்வைத்திருக்கின்றார். இதனூடாக அவரின் எதிர்பார்ப்பும் வெளிப்படுகின்றது. வட பகுதிக்கும் தென் பகுதிக்குமான இடைவெளியைக் குறைப்பதற்காவது மனிதநேய உணர்வு உள்ள மனிதர்கள் முன்வர வேண்டும் அல்லவா என்ற வினாவை அவர் எழுப்புகின்றார். அவரின் தந்தை மூன்று மொழிகளிலும் மக்களுடன் தொடர்பாடும் திறனைக் கொண்டிருந்தார் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். யாழ் சமூகத்துடன் இருந்த இதயபூர்வமான பிணைப்பின் காரணமாகவும், மனித ஒழுக்கவிழுமியங்கள் காரணமாகவும் அவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிச் செல்ல விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஒரே நாட்டில் வாழும் மக்களை பிளவுப்படுத்தியுள்ள மொழி என்ற தடுப்புச் சுவர் தகர்த்தெறியப்பட வேண்டும் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அவரின் தந்தையார் வடக்கிலிருந்து வெளியேறி அனுராதபுரத்துக்கு செல்ல வழங்கிய வாய்ப்பையும் மறுத்துவிட்டதனையும் சந்திரஜீவ இங்கு நினைவுகூர்கின்றார். யாழ் மக்களுடனான பிணைப்பின் காரணமாக ஏதொவொரு வாழ்வின்பத்தையும், சிறப்பான வாழ்வு அனுபவத்தையும் பெற்றுக் கொண்டதனால் தான் அவர் தனது குடும்பத்தாருடன் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றார். கல்வி கற்றவர்களும் ஆட்சியாளர்களும் புத்திசாதுரியமாக ஒரு நாட்டினுள் இணைந்து இருப்பதனூடாக மனிதநேயம் மிக்க ஓர் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் சிந்தித்திருக்கலாம்.

ஆனால் இன்றோ கல்வி கற்றவர்களும், அரசியல்வாதிகளும் இணைந்து யாழ்ப்பாணத்தை மட்டுமன்றி முழ நாட்டையுமே சின்னாபின்னமாக்கிவிட்டனர்.

சரத் சந்திரஜீவ எப்பொழுதும் கனதியான பணிகளை செய்வதில் வல்லவர். இதன் காரணமாக அவர் அழகியற்கலை பல்கலைக்கழகத்திற்கும் அதிக சுமை உள்ளவரானார். நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்றவாறு அழகியற் பல்கலைக்கழகத்தை மறுசீரமைக்க முடியும் என்ற அசையாத திடநம்பிக்கையினால் தான் அங்கிருப்பவர்களை அழைத்துக்கொண்டு முன்னோக்கிய ஓர் பயணத்தை ஆரம்பிப்பதற்கு அவர் எண்ணினார். ஆனால் முன்னேற்றத்தை விட இருப்பு தான் முக்கியம் என்ற விடயத்தை முன்னிறுத்தி செயற்படுபவர்களின் சதித்திட்டம் இறுதியில் வென்றது. தனது இலக்கு நோக்கிய பணிக்கு பதவியோ, உத்தியோகபூர்வமான இடமோ தேவையில்லை என்ற தன்னம்பிக்கையுடன் அவர் அங்கிருந்து வெளியேறினார் என்றே கருதுகின்றேன். அவர் சளைக்காமல் பணியாற்றும் திறன் கொண்டவர் என்பதால் இந்நூல் உருவாகியுள்ளது என்பதனைக் கூற முடியும். இங்கு மிக முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயம் நூலில் அவர் மும்மொழிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று காட்டும் ஆர்வமாகும். நல்லிணக்கத்திற்காக மேற்கொள்ளும் முதலீட்டை திறந்த வெளியில் சுதந்திரமாக அனைவரும் அனுபவித்துணர வேண்டும் என்ற தூரநோக்கு சிந்தனை அதனூடாக வெளிப்படுகின்றது.

இந்நூல் ஓர் கல்விமானின் கலைஞரின் முற்போக்கு பார்வையுடன் படைக்கப்பட்ட மனிதநேய படைப்பாகும். இந்த படைப்பில் பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு லால் ஹேகொட மற்றும் அப்பரெக்கே சுதம்ம தேரர் ஆகியோரின் கவிதைகளை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

*"இடைவெளியுடனான துவாரங்களைக் கைவிட்டு*
*அமைதியாக கதவு ஜன்னல்களை அகற்றி*
*நட்சத்திர சின்னங்கள் இல்லா தோளில் சுமந்து*
*நட்சத்திரங்கள் பெருத்த வாகனத்தில் ஏற்றி*
*கொழும்புக்கு காவிச் செல்வது*
*அலைகள்மோதும் குளத்தைக் காட்டவா?"*

**-லால் ஹேகொட**

*"மௌனமாக தாங்கிக் கொண்டிருக்கின்றன*
*பெரும் ரகசியங்களை*
*கதவு ஜன்னல்களின்*
*சட்டகங்கள்"*

**- அப்பரெக்கெ சுதம்ம தேரர்**

இந்நூலில் நான் அடிக்கடி சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றேன். இந்த நூலை எங்கேயாவது பாதுகாப்பாக ஓர் இடத்தில் மறைத்து வைக்க வேண்டும் என்று இந்த குறிப்பை எழுதும் போது என் மனதில் ஓர் சிந்தனை எழுந்தது. காரணம்? மக்களின் ஆணையில்லாத ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றார்.

அறகலயவை திருடிக்கொண்டு நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் தென்னிலங்கை கட்டிட நிர்மாணக் கலைஞர்கள் யாழ்ப்பாண ஜன்னல் கதவுகளை எப்படியாவது தம்வசப்படுத்திக்கொண்டு புதிய மாடமாளிகைகளை நிர்மாணித்துக்கொள்வதும் நடைபெறலாம் அல்லவா?

அறகலயவில் போராடிய இளைஞர்களை வேட்டையாடிக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் கொடூரமான அடக்குமுறைளை கண்மூடித்தனமாக ஆதரிப்பவர்கள் இந்நூலை தடை செய்யுமாறோ அல்லது அனைத்து நூல்களையும் அழித்துவிடுமாறோ ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவார்களாயின் அது வெகு விரைவாக அமுலாகிவிடும் என்று தோன்றுகின்றது. அவ்வாறு நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகளவில் உள்ள நாட்டின் சாபக்கேடாக அதற்கேற்றாற் போல் ஒரு நண்பரும் இருப்பதனை எவ்வாறு மறுக்க முடியும்?


அழிவின் சின்னாபின்னங்களை தம்வசப்படுத்திக் கொள்வதும், மற்றவர்களின் விளைச்சல்களின் அறுவடைகளை தன்னகப்படுத்திக் கொள்வதும் வெவ்வேறு அல்ல ஒன்று தான்.

- Anidda Newspaper 2022.10.16
- From Sinhala by Priyadharshini Sivarajah

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........  ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

...................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?


.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8  **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130  2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745  **23.** 455
**24.** 1l 100ml / 1100ml  **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30  **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1  **31.** 2  **32.** 3
**33.** 2  **34.** 3  **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**23.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**16.11.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அச்சி முகம்மட்டுக்கு விருது



அம்பாறை, நவ. 23

சிங்கப்பூர் முஸ்தபா அறக் கட்டளை மற்றும் தஞ்சைத் தமிழ்பல்கலைக்கழகம் இணைந்து வழங்கும் கரிகால் சோழன் விருதுக்கு இம்முறை இலங்கையில் இருந்து சம்மாந் துறை சந்தக்கவி அச்சி முகம் மட் தெரிவு செய்யப்பட்டுள் ளார்.

மலேசியா ,சிங்கப்பூர் , இலங்கை எழுத்தாளர்களின் மிகச் சிறந்த நூல்களை ஆராய்ந்து ஆண்டுதோறும் கரிகால் சோழன் விருது வழங்கி வருகிறது.

அந்த விழாவுக்கு இலங்கை யில் இருந்து சம்மாந்துறை சந் தக்கவி அச்சி முகம்மட்டினால் அனுப்பப்பட்ட 'எனது நில மும் நிலவும் ' எனும் மரபுக் கவிதைத் தொகுதி கரிகால் சோழன் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நூலாசிரியரான மரபுக் கவி ஞர் சம்மாந்துறை சந்தக் கவி அச்சி முகம்மட் அவர்களை தஞ் சாவூர் பல்கலைக்கழகம் கௌர வமாக அழைத்திருக்கிறது.

விழா நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி தஞ்சை தமிழ் பல்க லைக்கழகத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெற இருக்கி றது. (அ)

# கேரள கஞ்சா கடத்தியவர் கல்முனையில் சிக்கினார்!

## விசேட அதிரடிப்படை நடவடிக்கை



அம்பாறை, நவ. 23

250 கிராம் கேரளக் கஞ்சாவைக் கடத்திய சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக் கமைய அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட நடவ டிக்கையில் இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சம்மாந்துறை பொலிஸ் எல்லைக்குட்பட்ட வீரமுனைப் பகுதியைச் சேர்ந்த 52 வயது மதிக்கத்தக்கவர். போதைப் பொருளைக் கடத்தி செல்வதற்காக தயாராக இருந்தவேளை அவர் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 250 கிராம் பொதி செய்யப்பட்ட கேரளக் கஞ்சா விசேட அதிரடிப்படையினரால் கைப் பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாற்றுத்திறனாளி குடும்பத்துக்கு உதவி



அம்பாறை, நவ. 23

"ஒருநாள் ஒரு வேலைத் திட்டம்" என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெரியநீலாவணை சுனாமி தொடர்மாடி வீட் டுத் தொகுதியிலுள்ள மாற்றுத்திறனாளி குடும் பத்துக்கு நேற்று முன் தினம் உதவி வழங்கப் பட்டது.

கிழக்கின் சமூக செயற் பாட்டாளரும்,காரை தீவு பிரதேச சபை தவிசா ளருமான கிருஷ்ணா பிள்ளை ஜெயசிறிலின் இத் திட்டத்தின் கீழ் இந்த உதவி கள் வழங்கப்பட்டன.

புலம்பெயர் தேசத்தில் இருக்கக்கூடிய சில தாயகப் பற்றுள்ள பரோபகாரிகளின் உதவியோடு இத்திட்டம் முன் னெடுக்கப்படுகிறது.

நேற்று, மாற்றுத்திறனாளி அஜய் மற்றும் அவரது தாயா ரான பெண் தலைமை தாங்கும் குடும்ப தலைவி திருமதி செல்வ ராஜா அபிதா குடும்பத்துக்கு உணவுப் பொருட்கள் வழங்கப் பட்டன.

தமக்கு முடியுமானால் வாழ் வாதார உதவி செய்யுமாறு குடும்பத்தலைவி அபிதா வேண்டுகோள் விடுத்தார்.

கோரிக்கைக்கு விரைவில் தீர்வு தரப்படும் என சமூக சேவையாளர் ஜெயசிறில் உறு தியளித்தார். (அ)

# சாய்ந்தமருது கலைஞர்கள் இணைந்து சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்படம்




அம்பாறை, நவ. 23

சமூகத்தின் பிரச்னைகளையும், கூடாத பழக்கங்களையும் மக்க ளுக்கு எடுத்துரைத்து சமூக மாற் றத்தை நோக்கி சாய்ந்தமருது கலைஞர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்துள்ள "சமூக விழிப் புணர்வு குறுந்திரைப்படம்" எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய மண்டபத்தில் திரையிடப்படவுள்ளது.

இளம் இயக்குநர் எல்.எம். சாஜித் இயக்கத்தில் பிரபல கலை ஞர் அஸ்வான் சக்காப் மௌலா னாவின் பிரதான நடிப்பில் வெளிவரவுள்ள இந்த நாடகங்கள் முதல் தொழுகை, பணத்திமிரு, பெண்தேவதை, குடிபோதை, வட்டியின் வினை போன்ற சிறிய பகுதிகளாக பிரிக்கப்பட்டு திரையிடப்படவுள்ளது.

இந்த நாடகங்களில் பிரபல கலைஞர்களான எம்.எச்.எம்.அலிரஜாய், ஐ.ஜாபீர், இபாஸ் ஹஸ்னி, சுல்பிகா செரீப், எம்.ஐ.எம். அக்ரம், ஏ. ஆதம்பாபா, ஜே.முஸ்னத் அஹமட், பாத்திமா அன்ஹா, என்.எம்.அலி கான், எம். அல்தாப் போன்ற பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்த சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்பட வெளியீட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், கிழக்கு மாகாண கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். எம்.தௌபீக், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஆர்.எம். றிம்ஸான், கிழக்கு மாகாண தகவல் தொழி நுட்ப பேரவைப் பணிப்பாளர் யூ. எல்.என். ஹூதா உமர், சாய்ந்த மருது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எச். சபிக்கா, யுகே.எம். றிம்ஸான், அமானா நற்பணிமன்ற தலைவர் ஏ.எல்.ஏ. பரீட், சமூக நல்லிணக்க பேரவை தலைவர் எம்.எச்.எம். இப்ராஹிம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி என்.ஏ.அஸாம் உட் பட கலைஞர்கள், பிரதேச முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# நாட்டாரியல் இலக்கியத்திற்கு புத்தூக்கமளிக்க நடவடிக்கை



நிந்தவூர்,நவ. 23

கிழக்கு மாகாண பண் பாட்டலுவல்கள் திணைக் களம், கிழக்கிலங்கையின் நாட்டாரியல் இலக்கியத் திற்குப் புத்தூக்கமளிக்கும் நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளது.

கிழக்கின் பாரம்பரிய நாட்டாரியல் இலக்கிய வரலாறுகள், வெளிப்பாடு கள் மறைந்துபோகாது பேணிப்பாது காக்கும் வண்ணம் இதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் முக்கிய அம் சமாக கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் முதல் தடவையாக நாட்டார் கலை வித்தகர் விருது வழங்கப்பட்டு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2021 - 2022 தமிழ் இலக் கிய விழா, திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்சனின் நெறிப் படுத்தலில், திருகோணமலை, உவர்மலை, விவேகானந்தா கல்லூ ரியில் நடைபெற்றது.

இந்த மாகாண தமிழ் இலக்கிய விழாவில் முதல் தடவையாக அக்கரைப் பற்றைச் சேர்ந்த நாட்டாரி யல் இலக்கிய கர்த்தா வான எம்.ஐ.முஹம்மது ஜெலீல், நாட்டார்கலை வித்தகர் விருதினைப் பெற்றுக்கொண்டார்.

"எழுகவிஜெலீல்" எனும் புனைப் பெய ருடன் நட்டாரியலை இன்னும் உயிர்ப்பு டன் செழிப்புறவைத்துக்கொண்டிருக்கும் அவருக்கு முதன் முறையாக கிழக்கில் அறி விக்கப்பட்ட மேற்படி வித்தகர் விருது, மாகாண ஆளுநர் அனுராதாயஹம்பத் தின் பிரசன்னத்தில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டாரியலுக்கான கிழக்கு மாகாண வித்தகர் விருதினைப் பெற்றுக்கொண்ட எழு கவி ஜெலீலுக்கு இலக்கியகர்த்தாக்கள் மற் றும் கலை, இலக்கிய அமைப்பினர் பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். (அ-06)

# கொரிய மொழிப் பயிற்சி சம்மாந்துறையில் ஆரம்பம்



அம்பாறை, நவ. 23

இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கிலும் சம்மாந்துறை பிரதேச சபை நடத்தும் இலவச கொரிய மொழி பயிற்சி பாடநெறி அங்குராப் பண நிகழ்வு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம். முஹம்மட் நௌசாட் தலைமையில் அமீர் அலி பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம் மட்டின் நெறிப்படுத்தலில் நடை பெற்ற இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை உப தவிசாளர் ஏ.அச்சு முகம்மட், பிரதேச சபை உறுப்பினர் களான யூ.எல்.அஸ்பர், என். கோவிந்தசாமி, ஏ.எம்.எம்.நியாஸ், எம்.எஸ்.சரீபா, கொரிய மொழி போதனாசிரியர் வை.வீ.எம்.நபாஸ், அமீர் அலி பொதுநூலக நூலகர் ஏ. ஆர்.எம். இல்யாஸ், பிரதேச சபை யின் கொரிய மொழி பயிற்சி நெறிக்கான இணைப்பாளர் ஐ.எல். சப்ரி, பிர தேச சபை உத்தியோ கத்தர்கள், மாணவர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# உக்ரைனில் மில்லியன் கணக்கானோர் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாவார்கள்!



## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

நியூயோர்க், நவ. 23

இந்த குளிர்காலத்தில் உக்ரைனில் மில்லியன் கணக்கான மக்கள் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாவார்கள் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்பில் பாதி சேதமடைந்துள்ளது அல்லது அழிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 மில்லியன் மக்கள் தற்போது மின்சாரம் இல்லாமல் உள்ளனர் என்று ஐரோப்பாவுக்கான உலக சுகாதார நிறுவன பிராந்திய இயக்குனர் டாக்டர் ஹான்ஸ் ஹென்றி பி க்ளூாக் கூறினார்.

உக்ரைனில், சில பகுதிகளில் வெப்ப நிலை -20 செல்சியஸ் வரை குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து சுகாதார உள்கட்டமைப்பு மீதான 703 தாக்குதல்களை உலக சுகாதார நிறுவனம் ஆவணப்படுத்தியுள்ளது.

கடந்த வாரம், ரஷ்யா தனது போரின் மிகப்பெரிய வான்வழி குண்டுவீச்சுகளில் ஒன்றில் அதிக ஆற்றல் நிறுவல்கள் மற்றும் பொது மக்கள் கட்டடங்களைத் தாக்கியது. போர்க்களத்தில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து இது சமீபத்திய ரஷ்ய தந்திரோபாயமாகும். மேலும் குளிர்காலம் தொடங்கும் போது அதன் தாக்கம் மிகவும் தீவிரமாக உணரத் தொடங்குகிறது.

இதுகுறித்து உக்ரைன் தலைநகர் கிய்வில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த ஐரோப்பாவுக்கான உலக சுகாதார நிறுவன பிராந்திய இயக்குநர் டாக்டர் ஹான்ஸ் ஹென்றி பி க்ளூாக்,

'எளிமையாகச் சொல்வதானால், இந்த குளிர்காலம் உயிர்வாழ்வதைப் பற்றியதாக இருக்கும். உக்ரைனின் சுகாதார அமைப்பு இதுவரையிலான போரில் அதன் இருண்ட நாட்களை எதிர்கொள்கிறது. இந்த மோதல் முடிவுக்கு வருவதே சிறந்த தீர்வாகும்

தாக்குதல்கள் காரணமாக, நூற்றுக்கணக்கான மருத்துவமனைகள் மற்றும் சுகாதார வசதிகள் இனி முழுமையாக செயல்படவில்லை, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய எரிபொருள், தண்ணீர் மற்றும் மின்சாரம் இல்லை.

மகப்பேறு வார்டுகளுக்கு இன்குபேட்டர்கள் தேவை, இரத்த வங்கிகளுக்கு குளிர்சாதன பெட்டிகள் மற்றும் தீவிர சிகிச்சை படுக்கைகளுக்கு வென்டிலேட்டர்கள் தேவை, அனைத்திற்கும் ஆற்றல் தேவை' என்று அவர் கூறினார்.

அரவணைப்பு மற்றும் பாதுகாப்பைத் தேடி மூன்று மில்லியன் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. (அ)

# சீன தொழிற்சாலையில் தீ விபத்து! 36 பேர் பலி!



பீஜிங், நவ. 23

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் உள்ள அன்யாங் நகரில் உள்ள ஒரு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 36 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வென்பெங் மாவட்டத்தில் உள்ள அன்யாங் நகரில் கைசிண்டா வர்த்தக நிறுவனத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

இதில் 2 பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இன்னும் 2 பேரை காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து சென்று தீ பரவாமல் தடுத்தனர். தீ விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# இந்தோனேசிய நிலநடுக்கத்தில் இதுவரை 162 பேர் உயிரிழப்பு!



ஜகார்த்தா, நவ. 23

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் நேற்று முன் தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில் பலியானோர் எண்ணிக்கை 162 ஆக அதிகரித்துள்ளது.

300க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனை ஜாவா தீவுகள் ஆளுநர் ரித்வான் காமில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா தீவில் நேற்று முன் தினம் காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

மேற்கு ஜாவாவில் உள்ள சியாஞ்சூரில் 10 கி.மீ. (6.21 மைல்) ஆழத்தில் இதன் மையப்பகுதி காணப்பட்டது. 5.6 ரிச்டர் அளவிலான இந்த நிலநடுக்கத்தால், பல இடங்களில் கட்டடங்கள் சேதமடைந்தன. நிலச்சரிவுகளும் ஏற்பட்டன.

நிலநடுக்கத்தின் மையப் பகுதியில் இருந்த சியாஞ்சூர் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. சியாஞ்சூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்ததில் பலரும் இடிபாடுகளில் சிக்கினர். இப்பகுதிகளில் பேரிடர் மீட்புக் குழுவினர் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், நிலநடுக்கத்தால் இதுவரை 162 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்தோனேசிய பேரிடர் மேலாண்மைக் குழு பலி எண்ணிக்கையை இன்னும் 62 என்றளவிலேயே கூறிவருகிறது. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (அ)

# குடியிருப்பு பகுதியில் விழுந்தது விமானம்!

## கொலம்பியாவில் 8 பேர் பலி



பொகோட்டா, நவ. 23

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் சிறிய ரக விமானம் ஒன்று குடியிருப்புப் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில், 8 பேர் உயிரிழந்தனர்.

மெடலின் பகுதியில் 8 பேருடன் சென்ற சிறிய ரக விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் இயந்திரம் செயலிழந்து விமானியின் கட்டுப்பாட்டை இழந்து பெலன் ரோசல்ஸ் செக்டாரில் உள்ள வீட்டின் மீது விழுந்து நொருங்கியது.

விமானம் விழுந்ததால் குடியிருப்புகளில் மளமளவென தீப்பற்றி 7 வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர், மீட்பு பணியில் ஈடுபட்டனர். (அ)

# சொலமன் தீவுகளில் பயங்கர நிலநடுக்கம்

## சுனாமி எச்சரிக்கை




சொலமன் தீவுகளில் உள்ள மலாங்கோ பகுதிக்கு தென் மேற்கே நேற்று 7.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. எனினும், சொலமன் தீவுகளில் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.நேற்று முன் தினம், இந்தோனேசியாவின் முக்கிய தீவான ஜாவாவில் 5.6 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற் பட்டதை தொடர்ந்து, சொலமன் தீவு களில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள் ளது.

இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்துக்கு 162 பேர் பலியாகினர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். (அ)

# அமெரிக்காவில் படகு கவிழ்ந்து 5 பேர் மரணம்

நியூயோர்க், நவ. 23

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

புளோரிடாவின் லிட்டில் டார்ச் கீ கடற்கரையிலிருந்து 50 மைல் தொலைவில் அகதிகளுடன் சென்று கொண்டிருந்த படகு, பலத்த காற்றினால் திடீரென கடலில் கவிழ்ந்துள்ளது.

படகில் 19 பேர் இருந்ததாக நம்பப்படுகிறது. அதில் படகில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கியுள்ளனர்.

தகவலறிந்து வந்த அமெரிக்க கடலோர காவல் படையினர், நீரில் தத்தளித்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 9 பேரை பத்திரமாக மீட்டுள்ளனர். கடலில் மூழ்கி மாயமான 5 பேரைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (அ)



# தேர்தலை பிற்போடுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்!

## பொதுஜன பெரமுன வலியுறுத்து

கொழும்பு, நவ. 23

"தேர்தலென்பது மக்களின் ஜனநாயக உரிமை. உரிய காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. எனவே, தேர்தலை பிற்போடுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்."

-இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கான மக்கள் ஆதரவு குறையவில்லை. 25 ஆயிரம் பேர் வீதிக்கு இறங்கினார்கள் என்பதற்காக எமது ஆதரவு தளம் சரியாது. முகநூலில் யார் என்னதான் எழுதினாலும் மக்கள் மனங்களில் மொட்டுதான் உள்ளது. தேர்தலொன்று நடத்தப்பட்டால் அது தெரியவரும்.

எனவேதான் நாமும் தேர்தலை கோருகின்றோம். தேர்தலை பிற்போடுவதற்கு இடமளிக்கமாட்டோம். முன்கூட்டியே தேர்தலை நடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டுதான் ராஜபக்ஷக்களுக்கு உள்ளது- என்றார். (அ)

# காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் இலங்கையில்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவுகிறது

கொழும்பு, நவ. 23

காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கைக்கு உதவ பொதுநலவாய மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

எகிப்தில் இடம்பெற்ற கோப்- 27 கூட்டத்தின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ள அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் கொரியா உட்பட பல நாடுகள் இலங்கைக்கு உதவ தயாராக இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், எதிர்வரும் காலங்களில் அவர்களுடன் கலந்துரையாட அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்றும் கூறினார். (அ)

# உள்ளூராட்சி தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, நவ. 23

உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ இதனை தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

அதன்படி, அரசாணைச் சட்டத்தில் தற்போதுள்ள பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில், முதல் நியமனப் பத்திரத்தின்படி தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 25 சதவீதத்துக்குக் குறையாமலும் இரண்டாவது நியமனப் பத்திரத்தின்படி தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 25 வீதத்திற்கு குறையாத இளைஞர் பிரதிநிதிகளையும் நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் சட்ட மூலம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# யாழ். ஒஸ்மானியா கல்லூரிக்குள் நுழைந்து ஆசிரியர்மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர் மீது மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டதில் ஆசிரியர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியரான துரையப்பா கௌரிபாலன் எனும் ஆசிரியரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாடசாலை மலசல கூடத்துக்குச் செல்வதாக சென்ற மாணவன் நீண்ட நேரமாகியும் வராததால், மாணவனைத் தேடி குறித்த ஆசிரியர் சென்றுள்ளார்.

அங்கு மாணவன் சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்டமையால் மாணவனை ஆசிரியர் விசாரித்தபோது மாணவன் அங்கிருந்து தப்பிச் சென்று, தனது தந்தையாரை அழைத்துக்கொண்டு பாடசாலைக்கு வந்துள்ளான்.

பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்த மாணவனின் தந்தை , ஆசிரியர்களின் ஓய்வறையில் இருந்த குறித்த ஆசிரியர் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த ஆசிரியரை சக ஆசிரியர் அங்கிருந்து மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# சகல ஆணைக்குழுக்களுக்கும் விரைவில் புதிய தலைவர்கள்!

கொழும்பு, நவ. 23

தேசிய பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட சகல சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் விரைவில் புதிய தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள் என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ சற்றுமுன் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகசந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்

21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி இந்த நியமனங்கள்வழங்கப்பட உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# வெளியுறவு அமைச்சு கொன்சியூலர் பிரிவின் கட்டணங்களில் மாற்றங்கள்

கொழும்பு, நவ. 23

வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் தூதரகக் கடமைகள் தொடர்பான கட்டணங்களை மீளாய்வு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இது தொடர்பான கட்டணங்கள் திருத்தம் செய்யப்படவுள்ளதுடன், அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளியுறவு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு மற்றும் அதன் பிராந்திய அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் தூதரகப் பணிகள் தொடர்பான கட்டணங்கள் திருத்தப்படவுள்ளன.

இதன்படி, பரீட்சைச் சான்றிதழ்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கட்டணம் 500 ரூபாவிலிருந்து 800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு பிரஜைக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் எந்தவொரு ஆவணத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கட்டணம் 1,500 ரூபாவிலிருந்து 3,000 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இலங்கைத் தூதரகங்கள் அல்லது வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள் மூலம் மின்னணு ஆவணச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணமும் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளது.

பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்து வழங்குவதற்கான கட்டணம், இறப்புப் பதிவுக் கட்டணம், திருமணப் பதிவுக் கட்டணம் மற்றும் ஆவணங்களின் சட்டபூர்வமான தன்மையை நிரூபிக்கும் சான்றிதழ்களுக்கான கட்டணங்களும் உயர்த்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

# வலுவிழக்கிறது தாழமுக்கம்!

கொழும்பு, நவ. 23

தென்மேற்கு ஒட்டிய மேற்கு- மத்திய வங்காள விரிகுடாவில் யாழ்ப்பாணத்தில் இருந்து வட-வடகிழக்கே சுமார் 410 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை, மேற்கு-வடமேற்கு திசையில் தெற்கு ஆந்திரா மற்றும் வட தமிழ் நாடு-புதுச்சேரி கடற்கரையை நோக்கி நகர அதிக வாய்ப்புள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த 12 மணி நேரத்தில் படிப்படியாக அது வலுவிழக்கும்.

ஊவா மாகாணம் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

எவ்வாறாயினும், நாட்டின் பிற பகுதிகளில் முக்கியமாக சீரான வானிலை நிலவும். (அ)

# அத்தியாவசிய மருந்துப்பொருள் இறக்குமதிக்கு 2 பில்லியன் ரூபா!

## திறைசேரியிடமிருந்து கிடைக்கிறது

கொழும்பு, நவ.23

**அத்தியாவசியமான மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து 2 பில்லியன் ரூபா நிதி கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வோருக்கு மாத்திரம் இதுவரை 20 பில்லியன் ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சர் கூறினார்.

குறித்த நிலுவைத் தொகையைக் கட்டம் கட்டமாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனிடையே, புற்றுநோயாளர்களுக்கு தேவையான மருந்துகள் உள்ளிட்ட உயிர் பாதுகாப்புக்கு தேவையான 14 வகையான மருந்துப் பொருட்கள் சுகாதார அமைச்சிடம் கையிருப்பிலுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத் தவிர, 384 வகையான அத்தியாவசிய மருந்துப் பொருட்களில் 151 வகையான மருந்துப் பொருட்கள் நாட்டில் இல்லை எனவும் சுகாதார அமைச்சர் கூறினார்.

தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துப் பொருட்களில் 60 வகையான மருந்துப் பொருட்கள் அடுத்த வாரமளவில் இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய இதன் போது சுட்டிக்காட்டினார். (அ)

# சிறுவர்களுக்கு ஏற்படும் ஒருவித வைரஸ் காய்ச்சல்

## பெற்றோர்களே அவதானம்!

கொழும்பு, நவ. 23

சிறுவர்களுக்கு இடையே பரவிச் செல்லும் ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் தற்போது அதிகரித்துள்ளதாக கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பெற்றோர் அவதானத்துடன் செயற்படவேண்டும் என அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அதேநேரம் சிறார்களுக்கு நுரையீரலுடன் தொடர்புடைய நோய் நிலைமைகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சிறார்களுக்கு இன்புளுவன்சாவுக்கு இணையான புதிய நோய் பரவி வருகிறது. அந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் சிறார்களுக்கு காய்ச்சல், தலைவலி, தடிமன், தும்மல், உடல் வலி, வாந்தி போன்ற நோய் அறிகுறிகள் காணப்படும் என வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார். (அ)

மனித கடத்தல் வழக்கு:

# ஓமானில் உள்ள இலங்கை தூதரக செயலாளர் உடனடி பதவி நீக்கம்!

கொழும்பு, நவ. 23

ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தின் செயலாளர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அவர் மீது மனித கடத்தல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறித்த நபர் இலங்கை வந்த பின்னர் கைது செய்யப்படுவார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ஓமானில் சிக்கிய பணிப் பெண்களை பாதுகாப்பாக அழைத்து வரவேண்டும்

## இ.தொ.கா. வலியுறுத்து

கொழும்பு, நவ. 23

இலங்கையிலிருந்து ஓமான் நாட்டுக்கு பணிப் பெண்களாக கொண்டு செல்லப்பட்டு, அங்கு சிக்கித் தவிக்கும் மலையகம் உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த பணிப் பெண்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வரவேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலந்துரையாடியுள்ளது.

இந்த கலந்துரையாடல் நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நானயக்கார ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையிலிருந்து சுற்றுலா விசா மூலம் பணிப்பெண்களாக ஓமான் நாட்டுக்குச் சென்று அங்கு தமது நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் தங்கியிருக்கும் மலையகம் உட்பட்ட ஏனைய பிரதேசங்களில் உள்ள பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்து நாட்டுக்கு அழைத்து வரவேண்டும் என இ.தொ.கா கலந்துரையாடியுள்ளது.

இதன்போது ஓமானில் விசா இன்றி தங்கியிருக்கும் பணிப்பெண்களிடம் நாளாந்தம் 05 திராம் அபராதத் தொகை அறவிடப்படுகிறது. அதேநேரத்தில் இலங்கையிலிருந்து ஓமானுக்கு பணிப்பெண்களாக சேர்த்துக் கொள்வதற்குச் செலவு செய்த அனைத்து செலவுகளையும் வழங்கிவிட்டு பணிப்பெண்களை இலங்கைக்கு அழைத்துச் செல்லுமாறு அந்த நாடு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சும் இணைந்து ஓமானில் சிக்கியுள்ள மலையகம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த பணிப் பெண்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இ.தொ.கா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

# “5ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒருபோதும் நிறுத்தப்படாது!”

கொழும்பு, நவ. 23

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5,000 ரூபா கொடுப்பனவைக் குறைக்கவோ அல்லது இரத்து செய்யவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த பிரதேசங்களில் இதற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கும் இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், இந்த கொடுப்பனவு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப் பகுதிக்கு, இந்த கொடுப்பனவுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# ஆடை தொடர்பான சுற்றறிக்கை ஆசிரியர்களுக்குப் பொருந்தாது

## பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ. 23

அரச அலுவலகங்களுக்கு எளிதான மற்றும் கண்ணியமான உடையில் பணிக்கு வரலாம் என வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பாடசாலை ஆசிரியர்களுக்கு பொருந்தாது என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச அலுவலகங்கள் தவிர, ஏனைய சேவைகளில் ஈடுபடும் நபர்களுக்கு இந்த சுற்றறிக்கை பொருந்தாது என அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே தெரிவித்தார்.

சுற்றறிக்கை குறித்து பல தரப்பினரின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில், பாடசாலைக்கு வசதியான ஆடைகளை அணிவது குறித்து கல்வி அமைச்சு தனது முடிவை அறிவிக்க வேண்டும் என்றும் மாயாதுன்னே கூறினார்.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் அலுவலக ஊழியர்களுக்கு மட்டுமே ஆடை கட்டுப்பாடு பொருந்தும் என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே, ஏனைய சேவைகளில் ஈடுபடும் நபர்களுக்கு இந்த சுற்றறிக்கை பொருந்தாது என அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பல பாடசாலைகளின் ஆசிரியர்கள் புடைவைக்கு பதிலாக வேறு வசதியான ஆடைகளை அணிந்து நேற்று முன்தினம் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விசேட வாய்ப்புகள்

கொழும்பு, நவ. 23

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு சில விசேட வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, சுதந்திர தினமான அடுத்த வருடம் பெப்ரவரி 04ஆம் திகதி தேசிய பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு பூங்காக்கள் உள்ளிட்ட இடங்களை இலவசமாக பார்வையிட பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொதுமக்கள் திரைப்படம் பார்க்கும் வாய்ப்பை வழங்கும் வகையில், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் நுழைவுச்சீட்டுக் கட்டணத்தை 50 வீதத்தால் குறைக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே இவ்வாறு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

## 8லட்சம்...

வெளியிட்டுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றும் வேலைத்திட்டத்தின் கீழ், இதுவரை 8,70,412 சாதாரண கண்ணிவெடிகளும் 2,169 இராணுவ டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேலும் 13.5 சதுர கிலோமீட்டர் நிலப்பகுதியில் நிலக்கண்ணிவெடிகள் இன்னமும் அகற்றப்பட வேண்டியுள்ளன என்றும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மீண்டும்...

மக்கள் முன்னணி எதிர்த்து வாக்களித்தது.

தவிர, மலையகக் கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸூம் எதிராகவே வாக்களித்தன. அத்துடன், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி (ஜே. வி. பி.) அரசாங்கத்திலிருந்து பிரிந்த டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ அணிகளும் எதிர்த்து வாக்களித்தன.

இதேவேளை, அரசாங்கத்தின் பக்கம் தாவுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித சேனாரத்ன எம். பி. எதிராக வாக்களித்தார். ஆனால், சுதந்திரக் கட்சி உறுப்பினரான துமிந்த திஸநாயக்க ஆதரவாக வாக்களித்தார். முன்னதாக நேற்று முன்தினம் சுதந்திர கட்சியின் கூட்டத்தில் வரவு - செலவு திட்டத்தை எதிர்க்கும் கூட்டத்தில் இவர் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இன்று புதன்கிழமை முதல் பாராளுமன்றத்தில் குழு நிலை விவாதம் நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும் டிசெம்பர் 8ஆம் திகதி மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்ளூராட்சி...

சமர்ப்பிக்கப்பித்துள்ளார்.

இந்த சட்டமூலத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும், ஒட்டுமொத்த இளைஞர் சமூகத்தின் நலன்களுக்காகவும், அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையிலான சூழலை உருவாக்கும் நோக்கில் உள்ளூராட்சி சபைகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் கட்டளைச் சட்டத்தில் தற்போது காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கமைய பெண்களுடைய பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படுகின்ற வகையில் முதலாவது நியமனப் பத்திரத் திற்கமைய தேர்ந்தெடுக்கப்பட வேண் டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 25வீதத்திற்கு குறையாததும், மற்றும் இரண்டாவது நியமனப் பத்திரத்திற் கமைய தேர்வு செய்து அனுப்ப வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக் கையில் 25வீதத்திற்குக் குறையாதது மான இளைஞர் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை உட்சேர்த்து உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை கொள்கை ரீதியாக அங்கீகரித்துள்ளது.

## தமிழ்...

பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளேன். தமிழ் கட்சிகள் முன்வந்தால் எந்த நேரத்திலும் பேச்சை ஆரம்பிக்க நான் தயாராக இருக்கிறேன்.

எந்தப் பிரச்னைக்கும் பேச்சு மூலம் தீர்வு காண முடியும். நான் வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்ற விரைந்து நடவடிக்கை எடுப்பேன் - என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

## ஆசிரியை...

பாராளுமன்றத்தில் எதிரணியின் சுயாதீன குழு பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர ஆசிரியர்களின் ஆடை விவகாரம் தொடர்பில் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொது நிர்வாக அமைச்சினால் கொவிட் காலத்தில் அரச அலுவலக பணியாளர்களுக்கு எளிதான ஆடைகளை அணிந்து வரும் வகையில் சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டது.

இந்நிலையில் இந்த சுற்றுநிருபத்தை பொருத்தமான வகையில் மீள் திருத்தம் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அதில், அரச ஊழியர்களுக்கு என்றே கூறப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் அரச ஊழியர்கள் என்பதனாலேயே இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான சுற்றுநிருபத்தில் ஒழுக்கம் தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஆடைகள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. இதனால் பொது நிர்வாக அமைச்சுக்கு இது தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கோரியுள்ளேன் - என்றார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 10இல்)

## பொருளாதார...

தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு விவாதத்தின் போதே முன்னாள் பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த சக்திகளின் உள்ளூர் முகவர்கள் இன்னும் செயலில் உள்ளனர். தேசத்தில் நடக்கும் போராட்டங்களுக்கு நிதியுதவி செய்தவர்கள் அவர்கள்தான். அவர்களின் நடவடிக்கை சுற்றுலா துறையை பாதிக்கிறது. இது இப்போது மீண்டு வரத் தொடங்கியுள்ளது.

“பாதுகாப்பு ஒதுக்கீடு தொடர்பில் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். ஒரு நாட்டின் பாதுகாப்பு எல்லாவற்றையும் விட முக்கியமானது என்பதை நான் அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். தேசத்தின் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்துவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

“வரவு - செலவுத் திட்டம் 2023 சில துறைகளின் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை என்றாலும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான மாபெரும் பாய்ச்சலாகும். வரவு - செலவு திட்டத்தில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளித்திருப்பது வரவேற்கத்தக்கது. நட்டத்தில் உள்ள அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். இருப்பினும், இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். தேசிய சொத்துக்களை வெளிநாட்டு சக்திகளுக்கு விற்பதற்கு நாங்கள் எதிரானவர்கள்” - என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

# தூக்கிலிடப்படவேண்டிய கொலையாளிக்கு அலுக்கோசு மாலை அணிவித்து வரவேற்பு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 23

2004 ஆண்டுக்கு பின்னரே இலங்கையில் பொருளாதார பின்னடைவு ஆரம்பமானது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் அறிக்கை யில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சிக்காக தூக்கிலிடப்படவேண்டிய கொலையாளிக்கு அலுக்கோசு மலர் மாலையணிவித்து வணங்கிய ஒரு காட்சியையே காண முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2004 ஆண்டுக்கு பின்னர் இலங்கையின் பொருளாதா ரத்தை கொலை செய்தவர்களாக மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, பீ.பி. ஜயசுந்தர மற் றும் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரை குறிப்பிடமுடியும்.

இவ்வாறான நிலையில் கடந்த ஞாயிறு விமான நிலையத்தில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமான பஸில் ராஜபக்ஷவுக்கு மாலையணி வித்து வரவேற்ற சம்பவமாகும்.

பொருளாதார வீழ்ச்சிக்காக தூக்கிலிடப்படவேண்டிய கொலையாளிக்கு அலுக்கோசு மலர் மாலையணிவித்து வணங்கிய ஒரு காட்சியையே காண முடிந்தது. முன்னதாக 2002- 2003 ஆண்டுக் காலப்பகுதியில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், அரச நிறுவனங்களை மறு சீரமைப்பு செய்யும் நிலைப்பாட்டை வெளியிட்டது.

எனினும் மஹிந்த, ஜே.வி.பி மற்றும் முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய தரப்பினர் இணைந்து அதனை எதிர்த்தனர்.

இதனையடுத்து 2004- 2014 ஆண்டுக்காலத்தில் அரச சேவை யாளர்களின் எண்ணிக்கை 3,50,000ஆல் அதிகரிக்கப்பட் டது. இதனால் அரச செலவீனம் கோடிக்கணக்கில் அதிக ரித்தது.

அதேநேரம் 2014 ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 107 ஆக இருந்த அரச நிறுவனங்கள் மற் றும் முயற்சிகள் 245ஆக அதிகரிக்கப்பட்டன.

இதன் காரணமாக இலங்கைக்கு 1.2 ரில்லியன் ரூபாய் நட்டமேற்பட்டது. இந்தநிலையில் 2003ஆம் ஆண்டு அரச நிறுவனங்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்தி யிருந்தால், இந்த நட்டம் ஏற் பட்டிருக்காது.-என்றார். (அ)

## வந்தார்...

எனவே, அவர் முதல் நடவடிக்கையாக கட்சிக்கு முழுமையான யாப்பு ஒன்றை தயாரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளார். இந்த யாப்பு முழுமை யாக அவரின் எண்ணப் படியே தயாரிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களின் சொல் லுக்கு உட்பட்டே கட்சியின் செயல்பாடு முன் னெடுக்கப்பட்டு வந்தது. இதனால், கட்சியின் உறுப்பினர்கள் சுயேச்சையாக செயல்படும் நிலைமை உருவானது. அவ்வாறு நடப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போனதாகக் கூறப்படு கின்றது. இதனை தவிர்க்கவும் அதிகாரத்தை தக்கவைக்கவும் இந்த யாப்பு உருவாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் தங்கியிருந்த காலப்பகுதியில் நாமல் ராஜபக்ஷவே கட்சியை வழிநடத்தியிருந்தார். அச்சமயம், அம்பாந்தோட்டையில் இருந்து தொகுதிக் குழு ஊடாக கூட்டங்களை நாமல் நடத்த தொடங்கி மாவட்ட மட்டத்துக்கு செல்ல முயற்சித்தார். எனினும் மக்கள் எதிர்ப்பால் அது தோல்வியில் முடிந்தது.

இதனிடையே, நாமல் ராஜபக்ஷ அண்மையில் முஸ்லிம் இளம் பெண் ஒருவரை கட்சியின் உயர் பதவிக்கு நியமிக்க நடவடிக்கை எடுத்தார். இந்தத் தகவலை நாமல் தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டார். ஆனால், கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இதன் காரணமாகவே பொதுஜன பெரமுன கட்சியில் அவ்வாறானதொரு நிலைப்பாட்டை ஏற்கவில்லை என்று மேற்படி இளம் முஸ்லிம் பெண் தனது டுவிற்றர் தளத்தில் செய்தி வெளியிட வேண்டியதாயிற்று.

எவ்வாறாயினும், கட்சியின் ஆறாவது பொது மாநாட்டை இந்த நவம்பரில் பிரமாண்டமாக நடத்த பஸில் திட்டமிட்டார். ஆனால், கட்சியின் அதிகாரத்தை தான் கைப்பற்றிய பின்னரே கூட்டத்தை நடத்த நாமல் திட்டமிட்டு அதனை ஜனவரிக்கு பிற்போட்டார் என்று கூறப்படுகின்றது. இந்நிலையிலேயே பஸில் ராஜபக்ஷ கட்சிக்கு அரசியல் யாப்பை தயாரித்து வருகிறார் என்று கூறப்படுகின்றது. (ஐ-சி)

## மீனவர்களுக்கு...

செயலாளர்கள், மாகாண கடற்றொழில் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

இதன்படி, மீனவர்களின் மண்ணெண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தினமும் 50 எரிபொருள் பவுசர்களை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மீனவர்களின் தேவைக்காக 357 மண்ணெண்ணெய் பவுசர்களை விடுவிக்க கடந்த வாரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் 206 பவுசர்களே (58வீதம்) பெற்றோல் நிலையங்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இதற்காக அரசாங்கம் 33 இலட்சம் டொலர்கள் மேலதிக செலவினங்களைச் செய்த போதிலும் மீனவர்ளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் முறையாக மேற்கொள்ளப்படாததால் மீனவர்கள், மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகக் கருதப்படுவதுடன், இதன் மூலம் மக்களின் போஷாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளின் அளவு மற்றும் அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பகுதிகளை தீர்மானிக்கும் பொறுப்பு, கடற்றொழில் திணைக்களம், கடற்றொழில் அமைச்சு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும், மீனவர்களுக்கு தேவையான மண்ணெண்ணையை வழங்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக தனியார், கூட்டுறவு அல்லது அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிலையங்கள் ஊடாகவும் அல்லது கடற்படையினரின் உதவியுடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் நேற்றைய இரு போட்டிகளும் சமன்!

லூசெய்ல், நவ. 23

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நேற்றிரவு நடந்த டென் மார்க் - துனிசியா, மெக் சிக்கோ - போலந்து அணிகளின் போட்டிகள் சமநிலையில் முடி வடைந்தன.

கட்டார் 2022 உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மூன்றாவது போட்டியில் டென் மார்க் - துனிசியா மோதின.



குழு டி அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டி யில் இரு அணிகளும் வலுவாக மோதின. பந்தை பெரும்பாலான நேரம் டென்மார்க் தங்கள் கட்டுப் பாட்டில் வைத்திருந்தாலும் அந்த அணியால் துனிசியா வின் கோல் காப்பாளரை கடந்து கோல் அடிக்க முடிய வில்லை.

இரு அணிகளுமாக 24 ஷொட் களை எடுத்தபோதும் கோல் எது வுமின்றி 0 - 0 என்ற கணக்கில் போட்டி முடிவடைந்தது.

இதேபோல நேற்றிரவு நடந்த நான்காவது போட்டி யில் குழு “சி“யின் போலந்து, மெக்சிக்கோ அணிகள்மோதின. இந்தப் போட்டியும் கோல் எதுவுமின்றி சமநிலையிலேயே முடிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மெஸ்ஸி சாதனை!

லூசெய்ல், நவ. 23

சவுதி அரேபியாவுக்கு எதிரான நேற்றைய போட்டியில் லயோனல் மெஸ்ஸி முதல் கோலை தண்டனை உதையில் (பெனால்டி) அடித்து 4 உலகக் கிண்ணத் தொடரில் முதல் கோலை அடித்தார்.

இதன்மூலம் கடந்த காலத்தில் ஆர்ஜென்ரீனாவின் மரடோனாவின் சாதனையைக் கடந்ததோடு நடப்பு உலகக் கிண்ணத்தில் ஆடும் இன்னொரு ஜாம்பவானும் போர்த்துக்கல் அணித் தலைவருமான கிறிஸ்டியானோ றொனால்டோ சாதனையையும் சமன் செய்தார்.

எனினும், இந்தப் போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி அதிர்ச்சிகரமாக தோல்வியடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் ஆர்ஜென்ரீனா அதிர்ச்சித் தோல்வி!

லூசெய்ல், நவ. 23

ஆர்ஜென்ரீனா சவுதி அரேபியா அணியிடம் 2 -1 என்ற கோல் அடிப்படையில் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

கட்டார் 2022 உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதல் போட்டி ஆர்ஜென்ரீனா - சவுதி அரேபியா அணிகள் மோதினட

குழு சி அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டி கட்டாரின் லூசெய்ல் நகரில் நடைபெற்றது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் தண்டனை உதை வாய்ப்பை (பெனால்டி) வாய்ப்பை பயன்படுத்தி ஆர்ஜென்ரீனா அணித்தலைவர் லயனல் மெஸ்ஸி கோல் புகுத்தினார்.

48ஆவது நிமிடத்தில் சவுதி அரே பிய வீரர் சலே அல்சேஹ்ரி கோல் புகுத்தி 1 - 1 என்று போட்டியை சமன் செய்தார்.

தொடர்ந்து, 53ஆவது நிமிடத்தில் சவுதி அரேபியாவின் சலீம் அல்தாவ்சரி அடித்த கோல், சவூதி அரேபி யாவை 2 - 1 கோல்கள் விகிதத்தில் முன்னிலைக்கு கொண்டு வந்தது. இறுதியில் சவுதி அரேபியா 2 - 1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவை வென்றது.



இரு தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்ரீனா தொடர்ச்சியாக 36 போட்டிகளில் தோல்வியடையாமல் இம்முறை உலக கிண்ணத் தொடருக்குள் நுழைந்தது. சம்பியனாகக்கூடிய அணிகளில் ஒன்றாகக் கருதப்படும் ஆர்ஜென்ரீனா, சவுதி அரேபியாவிடம் தோல்வியுற்றமை ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805




# புதிய விடியல் உதைபந்தாட்டம் மனோகரா, ஞானமுருகன் வெற்றி!

யாழ்ப்பாணம், நவ. 22

புதிய விடியல் உதைபந்தாட்டப் போட்டியில் ஞானமுருகன், மனோகரா அணிகள் வெற்றி பெற்றன.

டான் தொலைக்காட்சி குழுமம் நடத்தும் “புதிய விடியல்“ உதைபந்தாட்டப் தொடர் நடக்கிறது. இதில், தற்போது இரண்டாவது சுற்றுப் போட்டிகள் நடக் கின்றன.

துரையப்பா பொது விளையாட்டரங்கில் நேற்று இரு போட்டிகள் நடந்தன.

முதலாவது போட்டியில் மயிலங்காடு ஞான முருகன் அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் மோதியது.

போட்டி முழுவதும் ஆதிக்கம் செலுத்திய ஞான முருகன் அணி முதல் பாதி ஆட்டத்தில் மூன்று கோல் களை அடித்து முன்னிலை பெற்றது. வீனஸ் அணி பதில் கோல் போடாத நிலையில் முதல் பாதி ஆட்டம் 3 - 0 என்ற கணக்கில் நிறைவடைந்தது.

தொடர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்திலும் ஞானமுருகன் அணி அதிரடியாக ஆடி 4 கோல்களை அடித்தது. இந்தப் பாதி ஆட்டத்திலும் வீனஸ் அணி யால் கோல் எதையும் அடிக்க முடியவில்லை. இறுதி யில் 7 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் வடமராட்சி அல்வாய் மனோகராவை சந்தித்தது புத்தூர் விக்னேஸ்வரா. பரபரப்பாக ஆரம்பமான போட்டியில் இரு அணிக ளும் சளைக்காமல் மோதின. போட்டியின் இறுதியில் மனோகரா 4 கோல்களையும் விக்னேஸ்வரா ஒரு கோலையும் அடித்தன. இதனால், 4 - 1 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.